## 1. அழிவுகளை அகற்றுதல் (மாற்கு 1:40-42)

தொழுநோய் பாவத்தையும் அதன் கனிகளையும் குறிக்கின்றது. சரீரத்தில் ஏற்படும் நோயின் விளைவுகள் நம்மிலுள்ள பாவத்தின் விளைவுகளை விளக்குகிறது. தேவனுடைய பார்வையில் தொழுநோய் என்பது பாவத்தின் அருவருப்பையும் மாறுதலையும் மற்றும் அசுத்தத்தையும் குறிக்கின்றது. தொழுநோயும் பாவமும் ஆரம்ப நிலையில் சிறிதாக இருப்பினும் பின்பு தடுக்க முடியாத அளவிற்கு வளர்ந்து ஒரு மனிதனை முழுவதும் பாதிக்கும். தொழுநோய் பரவினதால் அவன் மரணத்தருவாயில் உள்ளான் என மருத்துவராகிய லூக்கா விவரிக்கிறார். தொழுநோய் முற்றி போனதினால் அவன் மக்கள் மத்தியில் தனியே வாழ்ந்து வந்தான். லேவியராகமம் 13:45 இன்படி அம்மனிதன் தன் வாயை துணியால் மூடி அசுத்தம் அசுத்தம் என அழ வேண்டும்.

ஒரு துப்புரவு பணியாளரிடம் நீங்கள் கைகுலுக்கி பேசுவதுபோல் நினைத்துப் பாருங்கள். அதைவிட உடல் முழுவதும் தொழுநோயால் பாதித்த ஒருவரிடம் பேசுவது எப்படி இருக்கும்? அவனின் உடற்காயங்களும், வாடையும், கண்களில் உள்ள பார்வையும் மிகவும் கொடுமையாக இருக்கும். அத்தகைய மனிதனை தொட்டு பேசுவது எளிதான காரியமல்ல ஆனால் இயேசுவின் தொடுதல் அம்மனிதனின் அனைத்து புண்களையும், அழுகிய நிலையையும் மாற்றியது இதுவே வல்லமையான அற்புதம்.

இந்த சூழ்நிலையில் தேவன் மாத்திரமே அவனை குணமாக்கினார் என்பதில் சந்தேகம் இல்லாத வகையில் இயேசு பிறரிடத்தில் செய்தது போன்ற ஒரு அற்புதத்தை செய்கிறார். தேவனுடைய குணமாக்கும் வல்லமை, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலும் அவர் நிகழ்த்தும் வல்லமையான அற்புதத்தினால் வெளியரங்கமாகத் தெரிகின்றது. தேவன் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை அனுமதித்து நம்முடைய பிரச்சினைகளுக்கு உதவிகரம் நீட்டியது யாரென்றும், யாருடைய வல்லமையால் தீர்வு கண்டோம் என்பதில் சந்தேகம் இன்றி இருக்கவும் அப்படிச் செய்தார். விடாமுயற்சியோடு இருந்தால், நாம் ஆத்மீகத்தில் வளருவோம், தேவனும் மகிமையடைவார்.

## 2. நசுங்கிய புல் (மாற்கு 3:1-6)

இயேசு கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்ட மனிதன் சூம்பின கையை உடையவனாயிருந்தான். அது வலது கையாகத்தான் இருக்கும் என்று மருத்துவரான லூக்காவால் மட்டுமே கூற முடியும். பெரும்பாலான மக்கள் வலது கை பழக்கமுடையவர்களாயிருப்பதினால் இம்மனிதன் வேலை செய்வதற்கு வலது கை மிகவும் முக்கியமாய் தேவைப்பட்டது. மேலும் இந்த மனிதனின் ஒருகைதான் சூம்பினதாய் இருந்ததே தவிர அவனின் முழு கரங்கள் சூம்பினதாய் இல்லை. இது அவனின் பிறப்பின் குறை அல்ல, ஒருவேளை நோயின் காரணமாகவோ அல்லது ஏதேனும் விபத்தின்

காரணமாகவோ அவனுக்கு இப்படி நேரிட்டிருக்கலாம். ஏசாயா 42:3ல் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் என்பது இயேசுவின் திட்டமாகும். ஓய்வு நாளில் எங்கு சரியாக இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் இந்த மனிதன் இருந்தான். ஒரு வேளை அவன் அன்று வீட்டில் இருந்திருந்தால் இப்படிப்பட்ட அற்புதமான குணமாகும் வாய்ப்பு கிடைத்திருக்குமா? அதேபோல் தேவனுடைய சபையில் நாம் மற்றவர்களோடு கலந்து கொள்கிற நம்முடைய சொந்த ஓய்வு நாளும் இந்த உண்மையகைக் கொண்டது. ஒருவேளை ஜெப நேரங்கள், அந்நியோன்யம், சபை ஆராதனைகள் குடும்ப சபை கூட்டங்கள் மற்றும் பல கூட்டங்களை தவறவிட்டோமானால் தேவனுடைய வசனங்களினால் ஏற்படும் ஆத்மீக குணமாக்குதலை இழப்பது மட்டுமன்றி, சகோதர சகோதரிகளின் உற்சாகத்தினால் பெறும் விசுவாசத்தையும் கீழ்படிதலையும் இழக்க நேரிடும்.

உங்களின் ஆவிக்குரிய பாதையில் நெரிந்த நாணல் அல்லது உலர்ந்த கரத்தை காணமுடிகிறதா? இயேசு உதவிசெய்வார்.

### 3. அலைகளை அமைதலாக்குதல் (மாற்கு 4:35-41)

இயேசு, சீஷர்களின் பயத்தையும், அவிசுவாசத்தையும் கடிந்து கெள்கிறார். அவர்கள் கிறிஸ்துவின் மேலிருந்த முழு நம்பிக்கையையும் இழந்து விட்டனர். அவர்கள் தங்களின் முழு நம்பிக்கையையும் விசுாவசத்தையும் வளர்க்க கற்றுக் கொள்ளவில்லை. இயேசு அவர்களோடு இருக்கும் போதும் பேசும் போதும் மட்டுமே தைரியமாக இருந்தார்கள். அவர்களுடைய விசுவாசம் குறைவாக இருந்ததினால்தான் அவர்களின் தேவையான நேரங்களில் சமாதானமும் அமைதியும் கிடைக்காமற் போனது.

சீஷர்கள் தங்கள் விசுாவசத்தை முழுவதும் இழக்கவில்லை, ஏனென்றால் தங்களை இரட்சிக்கும்படி இயேசுவை அழைத்தார்கள். இயேசுவின் அநேக அற்புதங்களை அவர்கள் கண்டிருப்பதனால் இது அவருக்கு பெரிய பிரச்சினையில்லை என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். இயேசு தேவனுடைய குமாரன் என்பதால் அவர் நித்திரையடைந்தாலும் விழித்திருந்தாலும் அவருக்கு எந்த வித்தியாசமும் இல்லை என்பதை உணராதவர்களாய் இருந்தார்கள். மேலும் தேவன் ஒருபோதும் தம்முடைய குமாரனை கடலில் மூழ்கவிடார். "தேவனே சமுத்திரத்தின் கதவுகளை அடைத்தவர்.. மற்றும் இம்மட்டும் வா., மிஞ்சி வராதே".. என்று யோபு 38:8,11 ல் வாசிக்கிறோம். சீஷர்கள் தங்களின் விசுவாசத்தை கிரியையினால் காண்பிக்கவில்லை. பயமும் விசுவாசமும் என்றும் இணைந்திருக்காது, பயம் விசுவாசத்தை முடமாக்கிவிடும்.

நம்முடைய வாழ்வில் எத்தகைய சுழற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது என்பதை பாருங்கள் சுழற்காற்று என்பது நம் வாழ்வின் முக்கிய அங்கம் ஆகும். ஆனால் நாம் யாரை

நோக்கி பார்க்கிறோம் என்பது தான் கேள்வி, தேவனையா? சுழற்காற்றையா? நம்முடைய நோக்கம் சுழற்காற்றின் மீது இருந்தால் நமக்கு எந்த நன்மையும் நிகழாது ஆனால் அத்தகைய காற்றினை நம் தேவனுடைய குணமாக்கும் வல்லமைக்குள் வர அனுமதிக்க வேண்டும்.

### 4. லேகியோனை துரத்துதல் (மாற்கு 5:1-11)

இயேசு கிறிஸ்துவின் வல்லமையை பிசாசுகளும் அறிந்திருந்தன. 2000 அசுத்த ஆவிகள் பிடித்திருந்த அம்மனிதன் இயேசுவுக்கு முன்னால் முழங்காலிட்டான். இயேசுவே அனைத்திற்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

இயேசு அம்மனிதனை சந்திக்க முயற்சித்து அவனுடன் நட்புறவை ஏற்படுத்தினார். இதுவே அம்மனிதனின் வாழ்வில் நடக்கவிருக்கும் மிகப் பெரிய அற்புதத்தின் ஆரம்பம். அவன் அதை அறியாதிருந்தான். இயேசு அவனிடத்திலுள்ள அசுத்த ஆவிகளை விரட்டி, அவனை காயப்படுத்தி தன்னை அவருக்குள் அடிமையாக்க போகிறார் என்று பிசாசுகள் அம்மனிதனிடத்தில் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்த மனிதன் இயேசுவை தன் வாழ்வில் அனுமதித்ததினால் அவனுக்கு நேர்ந்தது வித்தியாசமாக இருந்தது.

இயேசு இல்லாத வாழ்க்கை இம்மனிதனின் கல்லறை வாழ்க்கை போன்றது, நம்மை நாம் காயப்படுத்தி, வலியினாலும் மன உலைச்சலாலும் சத்தமிட்டு பலவீனத்திலும் அடிமைத்தனத்திலும் கட்டப்பட்டு அழிந்து போகிறவர்களும், துர்நாற்றம் வீசுபவர்களாயும் இருக்கிறோம். எனினும் 2000 அசுத்த ஆவிகளைக் கொண்ட இம்மனிதனை குணமாக்க இயேசுவுக்கு ஒரே ஒரு வார்த்தை போதுமானதாய் இருந்தது. நம்முடைய வாழ்க்கையை திறந்தோமானால் நித்திய சுகம் பெறுவோமே தவிர நாம் காயம் அடைய மாட்டோம். அது நமக்கு சமாதானத்தின் ஆறாகவும் சந்தோஷத்தின் நீரூற்றாகவும் கடல் போன்ற அன்பை தரும். சகலவித பயமும் நடுக்கமும் பிசாசினால் வருபவை, நாம் அடிமைத்தனத்தில் இருக்க வேண்டும் என்று பிசாசுகள் நம்மிடம் பொய்களை கூறும். இயேசு நம்மிடத்தில் சத்தியத்தை பேச, சத்தியம் நம்மை விடுதலையாக்கும்.

### 5. அவமானத்தை குணமாக்குதல் (மாற்கு 5:24-34)

பழைய ஏற்பாட்டின் பரிசுத்த சட்டங்களின் படி (லேவியராகமம் 15:25-27) "ஒருமனிதனின் சரீரத்தில் உதிரம் ஊறிக் கொண்டிருந்தால் அவன் தீட்டுள்ளவனாக கருதப்படுவான் "மற்றும் லேவியராகமம் 15:27- யில் அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன்

எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழ்கி, சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக" என்பதை வாசிக்கிறோம்.

இந்த ஏழை பெண்ணின் குணமாக்க முடியாத நோய், அவளது ஆரோக்கியத்தை மட்டுமல்ல அவளது பொருளாதார நிலைமையையும் பாதித்தது. அநேக வைத்தியர்கள் முயற்சித்தும் அவளது வேண்டுதல் சற்றாகிலும் நிறைவேறாமல் அதற்கு மாறாக இன்னும் மோசமான நிலையை அடைந்தாள். (மருத்துவராகிய லூக்கா தம் சுவிசேஷத்தில் குறிப்பிடும்போது அவள் அதிக வருத்தப்படுகிறாள் என்கிற வார்த்தையை தவிர்க்கிறார்) இப்பெண்ணின் நிலைமை பின்பு வலியும் வேதனையும் நிறைந்ததுமாய் இருந்தது.

இருப்பினும் இந்த ஸ்திரீயானவள் இயேசுவை தொட்டால் சொஸ்தமடையலாம் என விசுவாசித்து தீர்மானம் கொண்டிருந்தாள். சட்டத்திட்டங்களை மீறி மற்ற ஜனங்களோடு தன் விருப்பத்துடன் கலந்து கொள்வதால் ஏற்படும் விளைவுகளை குறித்துக் கவலைபடாமல் தன் தேவையினிமித்தம் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினாள்.

இயேசு இந்த ஸ்திரீயின் அவமானத்தை அகற்றியது மட்டுமல்லாமல் அவளது நம்பிக்கையை உறுதியாக்கும்படியாக அவளை தனது மகள் என்று அழைக்கிறார். இயேசுவினிடத்தில் நாம் வெட்கப்பட வேண்டாம். அவை நம் வாழ்வில் நடக்கவிருக்கும் அற்புதங்களை காண தடையாக இருக்கின்றது. நம்முடைய வாழ்நாள் முழுவதும் அவமானத்தை ஏன் சுமக்க வேண்டும்? இயேசுவினிடத்தில் எடுத்து செல்லப்போவது எப்போது?.

### 6. யவீருவின் குமாரத்தி உயிர்த்தெழுதல் (மாற்கு 5:35-42)

இயேசு கிறிஸ்து, யவீருவின் வீட்டை நோக்கி நடந்து போகையில், யவீருவின் நண்பர், "உம்முடைய குமாரத்தி மரித்து போனாள்", என்கிற கெட்ட செய்தியை அறிவிக்கிறார். கிரேக்க மொழியில் "மரித்தார்" என்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. "மரித்தாள் உம்முடைய குமாரத்தி" என்று கூறப்படும். இப்படி கூறுவது மனச்சோர்வை ஏற்படுத்தும், ஆனாலும் கிறிஸ்துவோடு கூட இருப்பது துயரத்தை நீக்கும் தேவ நம்பிக்கையை அளிக்கும்.

இயேசு கிறிஸ்து இச்செய்தியை கேட்டவுடன், இருதயம் நொருங்குண்ட யவீருவின் பயத்தை போக்கி, ஆறுதல்படுத்தும்படி அவனை நோக்கி, "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அவள் குணமாக்கப்படுவாள்", என்றார். மரணம் என்பது நம் வாழ்வின் இறுதி முடிவு, ஆனால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது நம் மரணம் அவரின் வல்லமையான அற்புதத்தின் உலகை திறந்து பார்க்கும் புதிய வாசலாகும்.

**7. சிறந்தவைக்கு கொடுத்தல் (மாற்கு 6:35-44)**

கிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு சென்று நற்செய்தியை பகிர்ந்து கொண்டார். சீஷர்கள் அனைவரும், தங்களுடையதை எல்லாவற்றையும் பின்னாக விட்டுவிட்டு இயேசுவை பின்பற்ற முடிவெடுத்தார்கள். இயேசுவின் போதனைக்கு செவிசாய்த்தது மட்டுமின்றி, அவரின் அற்புதங்களின் சாட்சியாகவும், அற்புதத்தில் பங்கெடுத்தவர்களாயும் இருந்தார்கள்.

இங்கு அநேக ஜனங்கள் கிறிஸ்துவிற்கு செவிசாய்ப்பதை காண்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் போதனைக்கு செவி சாய்ப்பதில் கவனமாய் இருந்ததினால் ஜனங்கள் தங்கள் நேரம் சென்றதை அறியாமற்போனார்கள். ஜனங்கள் பசியாய் இருப்பதை அறிந்த சீஷர்கள் இயேசுவை நோக்கி, "ஜனங்கள் சென்று உணவருந்தி, பெலன் கொண்டு பின் வர வேண்டும் " என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இயேசு சீஷர்களை நோக்கி அவர்கள் வியக்கும் வகையில் உணவளிக்கும் பொறுப்பை சீஷர்களிடமே கொடுத்தார். அநேக ஜனங்களுக்கு உணவளிப்பதற்கு அதிக பணச்செலவாகும் என்பதை உணர்ந்த சீஷர்கள் கலக்கம் அடைந்தனர். அவர்களின் கஷ்டமான சூழ்நிலையை அறிந்த இயேசு, அவர்களிடம் இருப்பதை கேட்டறிந்தார். சீஷர்களின் இருதயத்தில் அநேக குழப்பமான கேள்விகள் எழும்பினாலும், தங்களின் இருதயத்திற்கு செவிசாய்க்காமல் கிறிஸ்துவுக்கு கீழ்படிவதற்கு முடிவு செய்தார்கள்.

சீஷர்கள் தங்களிடம் உள்ள குறைந்த உணவைக் கொடுத்ததினால் ஜனங்கள் திருப்தியடைந்தார்கள். அனைவரும் உணவருந்திய பின் மீதியான துணிக்கைகளை பன்னிரெண்டு கூடைநிறைய எடுத்தார்கள். நாமும் நம் வாழ்க்கையில் இருக்கும் கொஞ்சத்தை கிறிஸ்துவிடம் கொடுக்க தீர்மானித்தால், நம் வாழ்விலும், வேலையிலும், குடும்பத்திலும் சிறந்த காரியங்கள் நடப்பதை காண்போம். நம்மிடம் இருப்பது நமக்கு என்றும் போதாது. ஆனால் தேவனால் அதனை அதிகரிக்க கூடும். பின்பு தேவன் மீது நம் நம்பிக்கை வளர்ந்து நம் விசுவாசம் பெருகி சந்தோஷ சமாதானத்தை நம் வாழ்விலும் பெறுவோம்.

**8. கடலின்மேல் நடந்தார் (மாற்கு 6:45-52)**

இயேசு தம்முடைய சீஷர்களை தமக்கு முன்னே படவில் ஏறி போக கேட்டுக் கொண்டதை வசனம் தெளிவாக கூறுகிறது. இயேசு ஜனங்களை அனுப்பிவிடும்போது, தம் சிந்தனையில் ஏதோ ஒரு காரியத்தை வைத்து தான் அவர்களை அப்படி அனுப்பியிருக்கிறார் என்பது புரிகிறது.

உண்மையில் இயேசு, தன் பிதாவிடத்தில் நேரம் செலவழிக்க வேண்டியதால், ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார். அவர் ஜெபித்துக் கொண்டிருக்கையில்

கடலின் நடுவே காற்று அவர்களுக்கு எதிராக இருந்தபடியினால், அவர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை மேலிருந்து கண்டார். ஆனாலும் இயேசு தேவனிடம் இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் அதாவது விடியற்காலை மூன்றாம் மணி நேரம் வரை தங்கி ஜெபம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். சீஷர்கள் கண்டிப்பாக சோர்வாகவும், நித்திரை கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்று நான் அறிவேன். இயேசு தண்ணீரின்மேல் நடந்து அவர்களிடம் வருகிறார். அதனை கண்டு அவர்கள் ஆவேசம் அடைந்தார்கள். இயேசு அவர்களை கடந்து செல்லும்போது, அவர்களிடம் பேசி, உற்சாகப்படுத்தி உதவினார்.

இயேசு நான் தான் என்று கூறுவதன் மூலம் (பழைய ஏற்பாட்டில் தேவன் நான்தான் என்று தம்மை குறித்து கூறியிருக்கிறார்) இயேசு, நான்தான் கர்த்தர் என்று அவர்களுக்கு தெளிவாக்குகிறார். ஆனால் அற்புதம் செய்வதற்கு ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் ஏன் தேவைப்பட்டது? ஒன்றுமே இல்லாமல் அவர் அற்புதத்தை செய்திருக்கலாமே! தம்முடைய சீஷர்களை தமக்கு முன்னே படவில் ஏறி செல்லுமாறு இயேசு கூறுகையில், அவர் ஏதோ ஒரு காரியத்தை முடிவில் வைத்திருப்பதை எனக்கு உணர்த்துகிறது.

வ.52 அவர்களுடைய இருதயம் கடினமுள்ளதாயிருந்தபடியினால் இயேசு அவர்களிடத்தில் கேட்ட அப்பங்களைக் குறித்து உணராமற்போனதினால் அவர்கள் எடுத்த மீதமான பன்னிரெண்டு கூடை அப்பங்களை தவறிவிட்டனர்.

நம்முடைய வாழ்வில் இயேசுவின் தேவைகள் அல்லது சபையின் எதிர்ப்பார்ப்பைக் குறித்து கோபமும், கசப்புணர்ச்சியும் கொண்டவர்களாக இருந்தால் நம் கண்களுக்கு முன்பாக நடக்க இருக்கும் அநேக ஆசீர்வாதங்களை நாம் தவற இருக்கிறோம்.

ஆனால், நாம் இயேசுவைப் போன்ற இருதயம் கொண்டிருந்தாலோ, நன்றியுள்ளவர்களாக இருக்க விரும்பினாலோ தேவனோடு நேரத்தை செலவழிக்க வாஞ்சை கொண்டாலோ நம் வாழ்வின் கலங்கின தண்ணீரில் கலங்காமல் செயல்பட முடியும்.

### 9. புற ஜாதியான ஸ்திரீயின் விசுவாசம் (மாற்கு 7:24-30, மத்தேயு 15:21-28)

இக்கதையில் இயேசுவுடன் பேசிக் கொண்டிருக்கும் ஸ்திரீயின் உரையாடலைக்காண்கிறோம். ஆனாலும், மாற்கு தன்னுடைய சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளை குறித்து சிறப்பாக விளக்கியிருக்கிறார்.

முதலாவது, இங்கு யூதராகிய இயேசு புறஜாதியாரின் எல்லையில் ஒரு புறஜாதியான ஸ்திரீயை சந்திக்கிறார் என்று மாற்கு குறிப்பிடுகிறார். இயேசு, யூதர்களை பிள்ளைகள் என்றும் புறஜாதியாரை நாய்கள் என்றும் உருவகப்படுத்தி கூறுகிறார். இதன்

விளைவு, அப்பெண்ணின் மகளையும் நாய் என்று கூறுவதுபோல் காணப்பட்டது. ஆனால் மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகளுக்கு வீட்டில் சிந்துகிற துணிக்கைகளை கொடுப்பது வழக்கம் அதுபோல, இயேசுவின் ஊழியத்தினால் புறஜாதியாரும் பலன் பெற வேண்டும் என்பது அந்த ஸ்திரீயின் வாக்குவாதம். புறஜாதியாருடையே சுவிசேஷத்தை எவ்வளவு தந்திரமாக மாற்கு நியாயப்படுத்துகிறார்.

இரண்டாவது, புறஜாதியாரின் சுவிசேஷம் விசுவாசத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. ஏனென்றால், இந்த ஸ்திரீ விசவாசத்தினால் இயேசுவிடம் சென்றதால் அவளுடைய மகள் குணமாக்கப்பட்டாள். ஒருவர் யூதராயினும், புறஜாதியராயினும், நாம் இயேசுவின் உண்மையான சீஷர் என்பதற்கு நம்முடைய விசுவாசமே முக்கியத்துவம் வாய்ந்தது.

மூன்றாவது, இந்த ஸ்திரீயானவள் இயேசுவிடமிருந்து சிறந்ததை பெற்றுக் கொண்டாள். மாற்கு தன் சுவிசேஷம் முழுவதிலும் பெண்களைக் குறித்தும், அவர்களின் தேவைகளைக் குறித்தும் மிகவும் கவனமாய் இருக்கிறார். சுவிசேஷம் முழுவதும் பெண்களே முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். ஏனென்றால், பொதுவாகவே பெண்கள் பெலன் குறைந்தவர்கள். பெலவீனர்களே பெலவான்கள் என்று மாற்கு விளக்குகிறார்.

நம்முடைய கெஞ்சலோ, கண்ணீரோ தேவனுடைய இதயத்தை நகர்த்தாது என்பதை இவ்வற்புதத்தில் இருந்து கற்றுக் கொள்கிறோம். இயேசுவின் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் நாம் வைத்திருக்கும் விசுவாசமே மலைகளை நகர்த்தும். ஒரு மகத்துவமான அற்புதத்தை நீங்கள் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தால் அதை குறித்து வேதம் என்ன செல்கிறது என்பதை அறிந்து, அதன்படி தைரியமாக பேசி, ஜெபித்து, நடப்போமானால் அற்புதத்தை பெற்றுக் கொள்வோம்.

**10. தெக்கபோலியின் செவிடனும் ஊமையும் (மாற்கு 7:31-35)**

அநேக நேரங்களில் இயேசு அற்புதங்களை செய்வதற்கு முடிவெடுக்க ஊக்கப்படுத்தியது அவருடைய மனதுருக்கமே. கிறிஸ்துவின் இருதயமானது அநேக நோயாளிகளிடத்திலும், சரீர பலவீனமுள்ளவர்களிடத்திலும், பாதிக்கப் பட்டவர்களிடத்திலும், குறிப்பாக வயதானவர்களாய் பல ஆண்டுகள் தங்கள் திராணிக்கும் மிகுந்த பாரத்தை சுமந்து போராடுபவர்களிடத்திலும் செல்லக்கூடியதாக இருந்தது.

இக்கதையில் ஒரு விஷயத்தை சுலபமாக விட்டுவிட முடியாது. இயேசு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டு புறப்பட்டு தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாக கலிலேயா கடலருகே வந்தார். அங்கே கொன்னைவாயுடைய செவிடனை சந்திக்கிறார்.

இவ்விரு இடங்களின் ஒற்றுமை என்னவென்றால், இரண்டுமே பிசாசின் எல்லைகள். ஆம், இயேசு முதலில் இஸ்ரவேலின் தொலைந்து போன பிள்ளைகளுக்காக தான் வருகிறார். ஆனால் அவருடைய மனதுருக்கத்திற்கு எல்லையே இல்லை. அவரது அற்புதமான அன்பு, துரத்தப்பட்டவர்களையும், கைவிடப்பட்டவர்களையும், வரி வசூலிப்பவர்களையும், சமாரியர்களையும், புறஜாதியார்களையும் மற்றும் எதிரிகளான ரோமர்களையும் மறுரூபமாக்கியது.

இந்த வசனங்கள் இயேசுவினால் நிகழ்ந்த சரீரப் பிரகாரமான சுகமளித்தலை பற்றியிருப்பதால் செவிடராயும், ஊமையாயும் இல்லாத நமக்கு இவை பொருந்தாது. பலருக்கு காதுகளும், வாயும் இருந்தும் கேட்கவும் பேசவும் முடியாதவர்களாய் உள்ளனர். இவர்களே ஆத்மீகத்தில் செவிடர், ஊமையர் என அழைக்கப்படுகிறார்கள். ஆன்மீகத்தில் செவிடர், ஊமையர் யார்? அவர்களால் கேட்கவும் பேசவும் முடியும் ஆனால் புரிந்து கொள்ள முடியாது. ஊதாரணத்திற்கு இயேசு தம்முடைய மரணத்தைக் குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும் அநேகமுறை சீஷர்களுக்கு தெரிவித்தார், ஆனால் அவர்கள் தங்களின் சுய சிந்தனையினாலும், தங்களின் தனிப்பட்ட கனவுகளாலும், இயேசுவின் மரணத்தை புரிந்துக் கொள்ள முடியாமலும், ஏற்றுக் கொள்ளாமலும் இருந்தனர். இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டப் பின்புதான் புரிந்து கொண்டார்கள். ஒரே செய்தியை அநேக முறை கேட்டும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, அவர்கள் ஆவிக்குரிய செவிடர் ஊமைகளாக இருக்கிறார்கள்.

இதில் செவிடர், ஊமையனுடைய நண்பர்களும், இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். இங்கு இயேசு சுகமளிப்பதற்கான தனிப்பட்ட அற்பணிப்பை நம்மிடம் எதிர்ப்பார்ப்பதைக் காண்கிறோம். இயேசு தம்முடைய வல்லமையினால் அவனை தனிப்பட்ட முறையில் சந்தித்து தொடுகிறார். தேவனுடனான உறவுமுறையில் நம்முடைய விசுவாச செயல்பாட்டிற்கு நாம் தனிப்பட்ட முயற்சி எடுக்க வேண்டும் என்று இவ்வற்புதத்தில் கற்கிறோம். ஆன்மீகத்தில் ஊமையாகவும் செவிடராகவும் இருப்பவர்களுக்கு இரக்கம் பெற தேவனிடத்தில் ஜெபம் செய்வோம்.

**11. நான்காயிரம் பேருக்கு உணவளித்தல் (மாற்கு8:1-9)**

இயேசு தன்னுடன் மூன்று நாள் தங்கியிருந்த மக்கள் மீது கொண்ட மனதுருக்கத்தினால் இந்த அற்புதத்தைச் செய்தார். பெத்சாயிதாவில் செய்ததை அவர் தற்போது தெக்கபோலியில் செய்கிறார். முன்பு யூதர்களுக்கு செய்ததை தற்போது புறஜாதியாருக்கு செய்து கொண்டிருக்கிறார்.

இயேசு ஆவிக்குரிய வாழ்க்கையை மட்டுமல்ல சரீரப்பிரகாரமான வாழ்க்கையைக் குறித்தும் அக்கரை கொள்கிறார். வனாந்தரத்திலே, இயேசுவைப் பார்த்து இந்த கல்லுகளை அப்பங்களாக்கும் என்று சாத்தான் சோதித்த போது, அவர் பிரதியுத்திரமாக, மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார்.

இயேசுவினுடைய வார்த்தைக்கு பசியாயிருந்த ஜனங்களுக்கு அவர் இதே வசனங்களை போதிக்கவில்லை. மூன்று நாளுக்கான பிரசங்கத்தை கேட்பதற்கு ஜனங்களுக்கு எது தேவைப்பட்டது? இயேசு தம் பாடுகளை தம்மில் சுமந்து கொண்டு, மற்றவர்களுக்கு சந்தர்பத்தை அளித்தார். அவர்களே இன்றைய ஆத்மீகத் தலைவர்களாக இருக்கிறார்கள். தேவன் மேல் பசியுள்ளவராக இருக்கும் இடத்திற்கு உங்கள் ஆன்மீக வாழ்க்கையில் வந்திருக்கிறீர்களா? வாழ்க்கைத் தேவைகளை விட எப்போது தேவனின் அந்நியோந்நியத்தை அதிகமாய் விரும்பியிருக்கிறீர்களா? இயேசுவின் மிக நீளமான செய்தியை கேட்டு பொறுமை இழந்து அவரிடம் புகார் செய்தததாக சொல்லப்படவில்லை. கொடுக்கப்பட்ட நேரத்தைக் காட்டிலும் மூன்று நிமிடம் அதிகமாக செய்தியை பேசினால் குறை கூறும் ஜனங்களைக் கண்டிருக்கிறோம். ஆனால் இச்செய்தி மூன்று நாளைக்கு நீண்டது. மேலும் ஜனங்கள் மூன்று நாளுக்கானச் செய்திக்கு தயாராக வரவில்லை. மூன்று நாட்களுக்குத் தேவையான உணவு பொருட்களையும் அவர்கள் கொண்டுவரவில்லை.

தேவன் ஜனங்களின் மனதை நகர்த்துவதின் மூலம் நம் தேவைகளையும் சந்திக்கின்றார். தேவன் வெறுமனே வானத்திலிருந்து மன்னாவையோ, மீனையோ வரசெய்திருக்கலாம். ஆனால் அவர் தன் சீஷர்களை பயன்படுத்தினார். தேவனின் திட்டம் மனிதர்களே, இன்னும் பயன்படுத்துகிறார்!

இயேசு இதே போன்ற அற்புதத்தை சில மாதங்களுக்கு முன்பு யூதர்களின் முன்பாக செய்திருந்தபோது அவரின் சீஷர்கள் ஒன்றுமறியாதவர்களாய் இருந்தனர். நம்முடைய வாழ்விலும் தேவன் செய்த மாபெரும் கிரியைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தம்முடைய மக்களின் தேவைகளை சந்திப்பதற்கு தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதற்கு அவரது வசனங்களே சாட்சியாய் இருக்கின்றது. இதனை காண்பதற்கு தேவனின் பரிசோதனை நேரம் நமக்கு காத்திருக்கின்றது. இருப்பினும் எத்தனைமுறை நம்முடைய தேவைகளுக்காக அவரிடம் செல்ல தவிர்க்கிறோம்? எத்தனை முறை நம்முடைய ஆபத்தான நேரத்தில் ஓடிக்கொண்டும் அலறிக்கொண்டும், கூக்குரலிட்டும், நம் தேவைகளை சந்திக்க வல்லவரான நம் தேவனை மறந்து அவரிடத்தில் திருப்பாமல் இருக்கிறோம்? அனைத்திலும் தோற்றாலும் நாம் தேவனிடத்தில் திரும்ப வேண்டும். தேவனிடத்தில் திரும்புவதே நம்முடைய முதற்கடமையாகும்.

**12. பெத்சாயிதாவின் குருடன் (மாற்கு 8:22-26)**

இந்த முறை வேறொரு மனிதன் குணமாக்கப்படுகிறான். அவன் ஒரு கண்பார்வை இழந்தவன். இந்த குணமாக்கும் கதையானது மற்ற அற்புதங்களை விட வித்தியாசமானது. முதலாவது, இயேசு இவ்வற்புத்தை செய்வதற்கு முன்பு அந்த மனிதனை பட்டணத்தை விட்டு வெளியே அழைத்து சென்றார். இரண்டாவது, இவன் குணமாவதற்கு இரண்டு முயற்சிகள் தேவைப்பட்டது. ஒருவேளை இது பெத்சாயிதாவின் தவறா? அந்த பட்டணத்தார் இயேசுவை விசுவாசிக்கவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். மத்தேயு 11:21-22 மற்றும் லூக்கா 10:13-14-ல் இயேசு தன்னை ஏற்றுக் கொள்ளாததால் பெத்சாயிதாவை சபித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு அவிசுவாசத்தை நிராகரிக்கிறார்.

இந்த அற்புதத்தை செய்வதற்கு இயேசுவுக்கு ஏன் கடினமாக இருந்தது என்று நாம் யோசிக்கலாம். இதற்கு முன்பு செய்த அற்புதங்களில் ஒரு வார்த்தை சொன்னதும் மரித்தவன் எழுந்து நடந்ததும், ஊமையன் பேசியதையும் பார்க்கிறோம். இயேசுவுக்கு தெரியாமலேயே அவருடைய வஸ்திரத்தை தொட்டு ஒருவர் தன் நோயிலிருந்து குணமடைவதை காண்கிறோம். ஆனால் இங்கு என்ன நடக்கிறது? இக்குருடனுக்கு கண்பார்வை படிப்படியாக மீண்டும் கிடைத்ததுபோலவே, இயேசுவையும் கிறிஸ்தவத்தையும் உண்மையில் நாம் புரிந்துக்கொள்வதற்க்கான ஆத்மீக பார்வையும் நமக்கு படிப்படியாக கிடைக்கும் என்று சிலர் கூறுகின்றனர்.

முதலில் அப்போஸ்தலரும் மற்றவர்களும் இயேசுவை தெளிவில்லாமலும் அவரின் உண்மையான சுபாவத்தை புரிந்துக்கொள்ளாமலும் பார்த்தது போலவே இவனும் பார்க்கிறான். பின்பு தேவனுடைய பெரிதான கிருபையால் முழு பார்வையை அடைந்தான். அது போன்று நாம் ஆவிக்குரிய பார்வையை முழுமையாக அடைவதற்கு தேவகிருபையை அனுமதிக்க வேண்டும்.

**13. அசுத்த ஆவி பிடித்த சிறுவன் (மாற்கு 9:14-29)**

இச் சிறுவன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தான். நாம் இதுபோன்று அசுத்த ஆவி, பிசாசு, சாத்தான் போன்ற பெயர்களை கேள்விப்படும்போது அவைகள் வாலும் கொம்புகளுமுள்ள ஒரு ஜீவன் என நினைப்போம். ஆனால் நம்முடைய பொல்லாத சிந்தனைகளும் சோதனைகளும் இப்படிப்பட்ட பிசாசுகளாக திகழ்கிறது என்று நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, விசுவாசமில்லாத சந்ததியே எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? என்று கடிந்து கொள்கிறார். விசுவாசத்தால் எதையும் மாற்ற முடியும் நம்முடைய விசுவாசத்தின்படியே நமக்கு நடக்கும். இந்த சிறுவனின் தகப்பன் தன்னுடைய அவிசுவாசத்தை உணர்ந்து, அதை மேற்கொள்ள உதவி செய்யும் என்று ஜெபிக்கிறார்.

நாமும் சில நேரங்களில் அவிசுவாசத்தினால் போராடுவோம். நாம் எப்போது நம்முடைய அவிசுவாசத்தை கண்டறிந்து அதிலிருந்து மனந்திரும்ப வேண்டுமென்று முடிவெடுத்து ஜெபம் செய்கிறோமோ அப்போது மெய்யாகவே நம்மால் மாற முடியும். நம்முடைய பாவமோ பெலவீனமோ எதுவானலும் அதை நாம் உணா்ந்து, அனுமதித்து, அதைக்குறித்து தேவனிடம் உண்மையோடு ஜெபிக்கும் போது நிச்சயமாக அவைகளை மேற்கொள்ள முடியும். நம்மை கட்டுப்படுத்தும் பிசாசுகள் எதுவென்று ஆராய்ந்துப் பாா்ப்போம். ஒருவேளை நம்முடைய சுயநலம், சோம்பேறித்தனம், பெருமை, இச்சை, பேராசை, கசப்புணா்ச்சி மற்றும் பொறாமையாகவும் இருக்கலாம். உண்மையிலேயே நாம் மனம் மாற வேண்டுமென்றால் நம்முடைய சவுகரியமான வாழ்விலிருந்து வெளியேற வேண்டும். மாற்கு 10 ம் அதிகாரத்தில் அந்த குருடன் வெறுமனே அமா்ந்து கொண்டு பிச்சையெடுக்கவில்லை. ஆனால் இயேசு வந்துக் கொண்டிருக்கிறாா் என்பதை அறிந்தவுடன் சத்தமிட்டு உதவியை நாடுகிறான். ஜனங்கள் அவனை கடிந்து கொண்டாலும், தொடா்ந்து தனக்கு உதவி கிடைக்கும் வரை சத்தமிட்டு கொண்டிருந்தான். நாமும் மகத்துவமான அற்புதங்களை நம்முடைய வாழ்வில் எதிா்பாா்ப்போம். தேவன் நம்மை முன்னிலும் அதிகமாக பயன்படுத்தவேண்டும் என எதிா்பாா்க்க வேண்டும் அதை உங்களால் விசுவாசிக்க முடிகிறதா?

நம்முடைய வாழ்வின் நோக்கம் என்ன? தேவன் நம்மை சிருஷ்டித்து நம்முடைய வாழ்வில் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறாா். நாம் அதை அறிந்து கொண்டால் நம் வாழ்க்கை அா்த்தம் நிறைந்ததாக இருக்கும்.

**14. குருடன் பா்த்திமேயு (மாற்கு 10:46-52)**

பா்திமேயு, இயேசு தன்னை கடந்து செல்கிறாா் என்பதை கேள்விப்பட்டவுடன் அமைதியாக இருக்கவில்லை. உதவியற்றவனாகவும், மிகப் பெரிய காரியங்களை தன் வாழ்வில் எதிா்பாா்க்காதவனாக இருந்தாலும் முயற்சி எடுப்பதில் உறுதியாக இருந்தான். ஆதலால், தனக்கு உதவி செய்யக் கூடியவரிடம் அழுது கெஞ்சினான். அவன் இயேசுவின் கவனத்தை ஈா்க்க வேண்டும் என்று முன்னிலும் அதிகமாய் கூப்பிட்டான் என்று வேதத்தில் காண்கிறோம். அவனை சுற்றியிருந்தவா்கள் அவனுக்கு உதவி செய்யவில்லை. ஜனங்கள் அவனை மனச்சோா்வடைய செய்தாா்கள். ஆனாலும் பா்திமேயு இயேசு தனக்கு உதவி செய்யும் வரை சத்தமிடுவதென்று முடிவெடுத்தான்.

இயேசுவிடம் செல்வதற்கு இன்று நம்மை தடை செய்வது யாா்? நம்முடைய பாவத்தினாலும் அவிசுவாசத்தினாலும் ஏற்படும் பாவத்தின் விளைவு தான் நம்மை

தடைசெய்கிறது. சகோதர, சகோதரிகளே நாம் இயேசுவை கூப்பிடுவோம். நம்முடைய சபையிலும், மற்ற சீஷர்களின் வாழ்விலும் மற்றும் நம் வாழ்விலும்  நாம் எதிர்ப்பார்க்கும் மாற்றத்தைக் காண இயேசுவிடம் விசவாசத்துடனும்,  ஆழமான மனவிருப்பத்துடனும் கூக்குரலிட்டு அழைப்போம்! நம்முடைய தேவன் மிகவும் நல்லவர். நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாய் நற்கிரியைகளை நம்முடைய வாழ்வில் செய்ய விரும்புகிறார்.

நம்முடைய வாழ்வில் அற்புதங்கள் நடக்கும் என விசுவாசிப்போம் தேவன் இதுவரை நம்மை பயன்படுத்தினதைக் காட்டிலும் இன்னும் அதிகமாய் பயன்படுத்துவார் என்று விசுவாசிப்போம்.

**15. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் (மத்தேயு 8:5-13)**

தேவன் நம்மை அழைத்ததினால் நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோம். சில நேரங்களில் பலவித சோதனைகளால் நம்முடைய விசுவாசமானது உருவம் பெற்று பெலப்படுத்தப்படுகிறது. நாம் புதுமை அடைவதற்கு தேவனை அனுமதிக்க வேண்டும்.

நூற்றுக்கதிபதி என்பவர் பல பொறுப்புகளை கொண்ட ஒரு வல்லமையான மனிதர். இருப்பினும் தன்னுடைய வேலைக்காரனை மரணப்பிடியிலிருந்து மீட்பதற்கு கூடுதல் முயற்சி எடுக்க மனதாயிருந்தார். நூற்றுக்கதிபதி, தன் வேலைக்காரனை தன்னுடைய வீட்டில் பராமரித்து கவனித்து வந்தார். தன் வேலைக்காரன் பிழைக்க இயேசுவிடம் தன்னைத்தான் தாழ்த்திக் கொள்ளவும், அவரிடம்  மன்றாடவும் மனதாயிருந்தான். அவன் அதிகாரமுள்ள மனிதனாய் இயேசுவிடத்தில் பேசாமல், தாழ்மையோடும் விசுவாசத்தோடும் பேசினான்.  இயேசு கிறிஸ்துவினிடம் உள்ள அதிகாரத்தின் உட்கருத்தை நன்கு அறிந்தவனாய் இருந்தான். கிறிஸ்துவின் அதிகாரத்தை நாம் புரிந்து கொள்ளும் போது அதற்கேற்ற விசுவாசத்தை பெறுவோம்.

மற்றவர்களின் வேதனையை நம்முடைய வேதனையாக உணரும் போது தேவன் நமக்கு அருகாமையில் இருக்கிறார். ஏனென்றால் தேவனுடைய இருதயம் அத்தகையது.

நம்மை இருளில் மறைக்கும் நம்முடைய பாவப்பிடியில் இருந்து உடைத்தெறிந்து வெளிவரும் போதுதான் நம்முடைய விசுவாசம் வெளிப்பட்டு வளரும். நாம் வளரும் போதுதான் மற்றவர்களும் வளருவார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆத்மீகமாக தொலைந்து போனவர்களுக்கும், வேதனையடைந்தவர்களுக்கும் நம்முடைய வளர்ச்சியானது பலனளிக்கிறது.

**16. பேதுருவின் மாமி (மத்தேயு 8:14-17)**

நம்மில் பெலவீனம் இல்லாதவர்கள் யாரும் இல்லை என்பது தான் உண்மை. எல்லா பாவமும், தீய குணங்களும் ஒரு பெலவீனம்தான் ஆனால் நம்முடைய பெலவீனத்தை நாம் ஏற்று அதைப் பற்றி வெளிப்படையாக பேசும் போதுதான் வித்தியாசம் ஏற்படுகிறது. பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று பவுல் கூறியிருக்கிறார். இன்று நம்முடைய பெலவீனங்களை குறித்து பேச தயாராக இருக்கிறோமா? இயேசு பெலவீனர்களை பெலனுள்ளவரகளாய் மாற்றவே வந்திருக்கிறார்.

ஜோபி மேத்யு, 3 அடி 6 அங்குல உயரம் கொண்ட 30 வயதுள்ள நபர். அவர் ஒரு ஊனமுற்ற மனிதராக கருதப்பட்டாலும், அவரைப் பற்றி செய்தித்தாள்களில் நாம் படித்திருப்போம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானில் நடந்த உலக கை மல்யுதத்த போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று பதக்கங்களை பெற்று சாம்பியன் பட்டத்தை பெற்றார். நான் ஊனமுற்றவனாக இல்லாதிருந்திருந்தால் என்னால் இந்நிலையை அடைந்திருக்க முடியாது என்று ஜோபி கூறினார். என்னுடைய பெலவீனம் என்னை பூரணப்படுத்தியது.

இன்று தேவனுடைய வசனங்களை நாம் பார்க்கும் போது, நம்முடைய ஊனத்தை அறிந்து உணர முடிகிறதா? அல்லது நம்முடைய இருதயம் கடினமானதால் நம்மில் உள்ள ஊனத்தை காண முடியவில்லையா? நம்முடைய பெலவீனத்திலிருந்து வெற்றிகரமாக வெளிவந்து, அநேக பெலவீனருக்கு உதவும்படி விருப்பம் இருக்கிறதா?

நோயாளிகளையும், பாவிகளையும் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டவர்களையும் குணமாக்கும் இயேசுவிடம் சென்று உதவியை பெற்றுக் கொள்ளவோம். இயேசுவிடம் செல்வோமானால் அவரின் மகிமைக்கென நம் பலவீனத்தை பலமாய் மாற்றும் வல்லமையான அற்புதத்தை அவரால் செய்ய முடியும்.

**17. விசுவாசமுள்ள நண்பர்கள் (மத்தேயு 9:1-8)**

விசுவாசமே ஒரு அற்புதம் நடப்பதற்கான முக்கிய பங்காக இருக்கிறது. இந்த அற்புதத்தில் ஒரு தனிப்பட்ட மனிதரின் விசுவாசம் மட்டுமின்றி, மற்றவர்களால் வெளிப்படுத்தப்படும் விசாவசத்தினாலும் அற்புதம் நடக்கும் என்பதைக் காண்கிறோம். இச்சம்பவத்தில் திமிர்வாதக்காரனை இயேசுவினிடம் கொண்டு வந்த அந்த நான்கு பேரின் விசுவாசமே முக்கியமாய் கருதப்படுகிறது. இயேசு அதனை முக்கியப்படுத்த விரும்புகிறார் என்பதில் நான் உறுதியாய் இருக்கிறேன்.

இந்த திமிர்வாதக்காரனைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது, அவன் எவ்வளவு காலம் வியாதியுள்ளவனாய் இருந்தான் என்றும் அவன் பிறப்பிலேயே திமிர்வாதக்காரனா

என்றும் நமக்கு தெரியாது. ஆனால் அவனுக்கு நல்ல நண்பர்கள் இருந்தார்கள் என்று நமக்கு தெரியும்.

நம்மை இயேசுவிடம் அழைத்து செல்லும் நல்ல நண்பர்கள் இன்று இருக்கிறார்களா?

திமிர்வாதக்காரனை நோக்கி உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதன்மூலம் பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டென்பதை ஜனங்களுக்கு தெளிவாக்குகிறார். இதன்மூலம், தான் தேவன் என்று இயேசு வெளிப்படுத்துகிறார். பாவங்களை மன்னிக்க தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டென்று அறிந்த பரிசேயர்கள் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு எதிர்த்தார்கள். அவரால் அநேக அற்புதங்களைக் கண்டும், அவர் மேல் விசுவாசம் வைக்க மனமில்லாமற்போனார்கள்.

இரண்டு முக்கியமான விஷயங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நம்மை இயேசுவிடம் அழைத்து செல்லும் நல்ல நண்பர்களை நாம் அடைய வேண்டும். நாமும் நம்முடைய நண்பர்களை இயேசுவிடம் அழைத்துச் செல்பவராக இருக்கவேண்டும். இயேசுவே ஆண்டவரும், நம்முடைய பாவங்களை மன்னிக்க அதிகாரம் உடையவர் என்றும் கூறி நம் சகோதர சகோதரிகளை உற்சாகப்படுத்த வேண்டும்.

### 18. இரு குருடர்கள் (மத்தேயு 9:27-31)

இயேசுவுடன் விடாமுயற்சியோடு போராடும் இரண்டு குருடர்களை இங்கு காண்கிறோம். இயேசு தாம் தங்கும் இடத்திற்கு சென்றுக்கொண்டிருந்தார். இந்த குருடர்களைப் பற்றி எதுவும் பேசப்படவில்லை எனினும், ஒரு காரியத்தை நாம் அறிகிறோம். அவர்கள் இயேசுவை தாவீதின் குமாரனே என்று அழைத்தார்கள். தாவீதின் குமாரன் என்பது மேசியாவை (இரட்சகர்) குறிக்கும். இயேசு அநேகருக்கு உதவி செய்திருந்தும் இந்த குருடர்களை வழியில் பார்த்தும் அறியாதவர் போல் கடந்து சென்றார். ஆனால் இந்த குருடர்கள் அதிகபடியான விசுவாசத்தைக் காண்பித்து அவரை மேசியா என்று அழைத்து அவர் தங்கும் இடம் வரை அவரை பின் தொடர்ந்து சென்றார்கள். இயேசு தங்களுக்கு உதவாததினால் இருவரும் மனதில் காயம் அடைந்து, மனசோர்வுடன் தங்கள் வீட்டிற்கு சென்றிருக்கலாம். ஆனால், இயேசுவைப் பின்தொடர்ந்து, தங்களை காணும்படி அவர் தங்கும் இடம் வரை சென்றார்கள். இயேசு அவர்களை நோக்கி இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா? என்று கேட்ட கேள்வி மிகவும் முக்கியமானது ஏன் முக்கியம் என்றால் யூதர்கள் மேசியாவை அவர்களுடைய அரசியல் மீட்பராகக் கருதினார்கள். ஆனால் இந்த குருடர்களோ தங்களை குணமாக்கும் இயேசுவே உண்மையான மேசியா என்று அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள். இயேசுவே தேவன்

என்று அவா் மேல் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள். உண்மையில் இயேசுவை தேவனென்று விசுவாசித்ததினால் குணமானார்கள்.

நம்முடைய பிரச்சனை நிறைந்த நேரங்களில் தேவன் மீது முழுமையான நம்பிக்கையை வைத்தோமானல் அவா் மிகப்பெரிய பலனைத்தருவாா். இம் மனிதா்கள் வசனங்களின் ஆழமான அா்த்தத்தைப் அறிந்தனா். அதனைக் கைகொண்டார்கள். அவா்கள் ஆசீா்வாதத்தை பெறும்வரை பின் தொடா்ந்தார்கள். நாமும் வசனத்தை ஆழமாக அறிந்து கொண்டு "ஆசீா்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" என்கிற எண்ணம் கொள்வோம். நிச்சயமாக தேவன் நம்மை அதிசயமான வழியில் பயன்படுத்துவாா்.

**19. பிசாசுபிடித்த ஊமையன் (மத்தேயு 9:32-34)**

பிசாசுபிடித்த ஊமையான ஒரு மனுஷனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். அந்த மனிதன் பிசாசினால் ஊமையானான். நம்முடைய பாவங்கள் நம்மை ஊமையாக்குவதை கவனித்திருக்கிறீா்களா? பாவத்திலிருக்கும் போது, நம்மால் அதனைக் கடிந்து கொண்டு பேச முடியாது. பிசாசினைத் துரத்த வல்லவரான இயேசுவைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியபப்பட்டார்கள். தேவன் மிகச் சிறந்த மனிதா்களைப் பயன்படுத்தி, அநேக அற்புதங்களை செய்யக்கூடியவா் என்பதை ஜனங்கள் பாா்த்தும் படித்தும் இருக்கிறாா்கள். எலியா, எலிசா போன்ற மனிதா்களை தேவன் தம் கரங்களில் வல்லமையான கருவிகளாகப் பயன்படுத்தி அநேக ஜனங்களை சொஸ்தமடைய செய்திருக்கிறாா். ஆனாலும், ஜனங்கள் அத்தகைய அற்புதங்களைக் காட்டிலும் தற்போது தங்களின் கண்முன்பாக நடந்த அற்புதத்தை மிகச் சிறந்ததாய் எண்ணினார்கள்.

இன்று நம்முடைய வாழ்விலும் நம்டைய சபையிலும் மிகச் சிறந்த காரியங்களை காண வேண்டியுள்ளது. நம்முடைய முந்தைய பொன்னான நாட்களைக் குறித்துப் பேசி நம் நேரத்தை வீணடிக்கமுடியாது. அதனை எப்படி காண வேண்டும்? ஜனங்களை இயேசுவினிடத்தில் கொண்டு வர வேண்டும்! நம்மை சுற்றியுள்ள அநேக ஜனங்கள் தங்களுடைய பாவத்தினால் ஊமையாக்கப்பட்டு பாவத்தின் பாரத்தையும் குற்ற உணா்வையும் சுமந்து கொண்டு இருக்கிறாா்கள். பிறரிடம் பேசமுடியாமல், மிகுந்த பொல்லாங்கினால் சூழப்பட்டும் இருக்கின்றாா்கள். அவா்கள் ஆபத்தான தீய பழக்கங்களுக்கும் தீய குணங்களுக்கும் அடிமைகளாய் வாழ்ந்துக் கொண்டிருக்கிறாா்கள். அவா்களை இயேசுவிடம் கொண்டு வருவதினால் நீங்கள் அவா்களை காட்டிலும் இன்னும் அதிகமாய் ஆசீா்வதிக்கப்படுவீா்கள். நம்முடைய விசுவாசம் அதிகரித்து, இயேசுவிடம் இன்னும் நெருக்கமாவோம். ஒருவேளை நீங்கள் பாவத்தினாலும் அதன் குற்ற உணா்வினாலும் பாரமடைந்திருந்தால் (அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை) நம்முடைய இரட்சகரிடம் கொண்டு செல்பவா்களிடம் உதவி பெற தீா்மானிப்போம்.

அநேக அற்புதங்களை சாட்சியாக கண்டுத் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தின பரிசேயர்களை காண்கிறோம். இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க மனதில்லாமற் போனார்கள். தங்களுடைய பாவ சிந்தனைகளை நியாயப்படுத்தவதற்கு சரியான காரணத்தைத் தேடுவதில் நோக்கமாயிருந்தார்கள். சகோதர, சகோதரிகளே நம்முடய விசுவாசம் எப்படி இருக்கிறது? அது வளர்ந்து கொண்டிருக்கிறதா? என்று சிந்தித்துபார்க்க வேண்டும். என்னுடைய ஜெபவாழ்க்கயையும் விசுவாசமும் சிறப்பாக இல்லையென்றால் உடனே அதனை எனக்குள் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

**20. பேதுரு ஜலத்தின் மேல் நடந்தான் (மத்தேயு 14:22-33)**

இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு, நெடுநேரம் தனித்து ஜெபம் பண்ணினார். அதன்பின்பு, சீஷர்களின் படவானது காற்றினாலும் அலைகளினாலும் அலைவுபடுவதையும், சீஷர்கள் படவைக் கட்டுப்படுத்த போராடுவதையும் கண்டார். இயேசு கடலின் மேல் நடக்கிறதைக் கண்ட சீஷர்கள் இன்னும் அதிகமாய் அலறினார்கள். நம்பிக்கையையும் தைரியத்தையும் இழந்த சீஷர்களிடத்தில் "நான் தான் திடன் கொள்ளுங்கள்" என்று உறுதியளித்தார். இதுவரை கண்டிராத வித்தியாசமான இயேசுவைக் கண்டார்கள். தாம் விசுவாசித்து நம்பக்கூடிய இயேசுவைக் கண்டார்கள். ஜனக் கூட்டத்தில் தொலைந்து போன சிறு பிள்ளையானது தன்னைச் சுற்றியுள்ள கூட்டத்தைக் கண்டு, பயந்து அழுவதைப் போல் கற்பனை செய்து பாருங்கள். இதன் மத்தியில் அப்பிள்ளையின் தந்தை நடுவே நடந்து செல்வது போன்று, இயேசு சீஷர்களிடத்தில் சென்று அவர்களை தைரியப்படுத்தினார்.

இயேசு பேதுருவை கடலின் மேல்நடக்க சொன்னவுடன் அவன் நடந்தான், இருப்பினும் கடலின் அலைகளைப் பார்த்ததும் பயந்து தடுமாறினான். தனக்கு உதவி செய்யுமாறு பேதுரு இயேசுவை அழைத்தான். பேதுரு, ஏன் தன் நண்பர்களாகிய யோவான், யாக்கோபு அல்லது தன் சகோதரனாகிய அந்திரேயாவையும் அழைக்கவில்லை? அனைவரும் கடலின் தன்மையை நன்கு அறிந்தவர்கள் அல்லது பேதுருவே, தண்ணீரில் நீந்தி படவில் அருகே வந்திருக்கலாமே? ஆனால் இயேசுவால் மாத்திரமே அவனை ஜலத்தின் மேல் நடக்கவைக்க முடியும்.

நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, யாரிடத்தில் நம்முடைய கரங்களை நீட்டுகிறோம். யாரிடத்தில் உதவி பெறுகிறோம்? நம்முடைய சகோதரன், நண்பன் மற்றும் உறவினர்களைக் காட்டிலும் இயேசு இருக்கிறார். அவரால் நமக்கு உதவ முடியும். இயேசுவிடம் நம்முடைய கரங்களை நீட்டி அவரிடத்தில் திரும்புவோம்.

**21. மீன் வாயிலிருந்த பணம் (மத்தேயு 17:24-27)**

இயேசு தேவனுடைய குமாரனாயிருந்தும், தேவாலயத்துக்கு செலுத்த வேண்டிய வரியை தன்னார்வமாக செலுத்தி நாம் நடைமுறை படுத்த வேண்டிய ஒரு மாதிரியை நமக்கு வைத்து போகிறார். நாம் இவ்வுலகிலுள்ள அதிகாரிகளுக்கு கீழ்படியாதவர்களாய் இல்லாமல் நமக்கிருக்கும் பொறுப்புகளையும் செய்ய வேண்டும் என விரும்புகிறார். இயேசுவால் எதுவுமே இல்லாமலும் அந்த பணத்தை கொடுக்க இயலும். ஆனாலும் பேதுருவை அவருடைய திட்டத்தில் பயன்படுத்துகிறார். இதே போன்று பலமுறை செய்திருக்கிறார். அவர் அற்புதங்களை நடப்பிக்கும் போது மக்களையும் சேர்த்துக் கொள்கிறார்.

பேதுருவை தூண்டில் போட்டு முதலாவதாக அகப்படும் மீனிலிருந்து கிடைக்கும் பணத்தை வரியாக செலுத்துமாறு கூறுகிறார். பேதுரு, ஒரு மீனவனாக இதுபோன்ற அனுபவத்தை மீன் பிடிக்கையில் பெற்றிருக்கமாட்டார். தன் பார்வைக்கு அது சரியானதாக தோன்றாவிட்டாலும் கீழ்படிய முடிவெடுத்ததினால் தானும் அந்த அற்புதத்திற்கு சாட்சியாக இருந்தார். தேவனுடைய வல்லமையை அவரால் பார்க்க முடிந்தது.

அதுபோல நாமும் இன்று இயேசுவின் வசனத்தின்படி அவரை பின்பற்ற முடிவெடுத்தோமென்றால் நம்முடைய வாழ்க்கையில் அவர் செய்யக்கூடிய அற்புதத்தை நாம் காண முடியும். தேவன் நம்மையும் பயன்படுத்தி அற்புதமான காரியங்களை நிகழ்த்துவார். நம்முடைய விசுவாசமானது அதிகரிக்கப்படுவது உறுதி.

**22. பட்டுப்போகும் அத்திமரம் (மத்தேயு 21:17-22)**

காலை வணக்கம் சகோதர சகோதரிகளே, இன்று நாம் அத்திமரம், அதாவது பிரசித்தமான ஒரு அத்திமரத்தைப் பற்றி பார்ப்போம். சபிக்கப்பட்டு பட்டுபோன அத்திமரத்தை பற்றி மட்டுமல்ல இயேசு நம்மை விசுவாசத்திற்கு அழைக்கும் ஒரு உறுதியான அழைப்பையும் காணலாம். இயேசு நம்மையும் தன்னுடைய சீஷர்களை போல மிகுந்த விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமேன சவாலிடுகிறார். அத்திமரம் பட்டுப் போவது சீஷர்களுக்கு ஆச்சரியமாக இருந்தாலும் இயேசுவுக்கு அது ஒரு சாதாரணமானது. ஏனென்றால் இயேசு தன் வார்த்தையையும் தேவனுடைய வல்லமையும் குறித்து உறுதியான விசுவாசம் கொண்டிருந்தார். இயேசுவுக்கு தெரியும் அவர் சொன்னது நிச்சயம் நடந்தேறும் என்று. அது நடக்கவேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கிறார்.

இன்று நம்மிடமிருந்தும் அப்படிப்பட்ட விசுவாசத்தைதான் இயேசு எதிர்ப்பாக்கிறார். நாம் தேவனை முழுமையாக மற்றும் நிறைவாக புரிந்து கொண்ட சீஷர்களாக பார்க்க விரும்புகிறார். நம்முடைய வாழ்க்கையில் இயேசுவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோமாக!.

**23. இது எப்படி சாத்தியமாகும் (லூக்கா 1:26-37)**

காப்பிரியேல் தோன்றுவதற்கு முன், கன்னிகையான மரியாள் தன் வாழ்வை குறித்த ஒரு பெரிய கனவில் இருந்திருக்கலாம். யோசேப்பு தன்னை மணந்து கொள்வதற்காக நிந்சயமான பிறகு அந்த நாளுக்காக ஆயத்தமாக காத்துக் கொண்டிருந்தாள். ஆனால் திடீரென்று வாழ்கையில் அனைத்தும் தலைக்கீழாக மாறுகிறது. தேவதூதன், வாழ்த்துதல், ஆறுதல், அதிர்ச்சி, அழைப்பு, கர்ப்பம், திருமண நேரத்தில் குழந்தை என்று தன்னால் நம்பமுடியாதவைகளை சந்திக்கிறாள். இது எப்படி சாத்தியமாகும்.

இதேபோன்ற அநேக பதில்களை நாம் வேதத்தில் தேவன் தன்னுடைய திட்டத்தை வெளிப்படுத்தும் போது பல முறை பார்க்கலாம். இங்கு சகரியா "இதை நான் எதினால் அறிவேன்? " நான் கிழவனாயிருக்கிறேன்… என்று சொல்வதை பார்க்கிறோம். (லூக்கா 1:18) சாராள், "நான் பிள்ளை பெறுவது மெய்யோ?" (ஆதி. 18:12) மோசே பலமுறை … "நான் பார்வோனிடம் சென்று பேச எம்மாத்திரம்" (யாத் 3:11) "உம்மை குறித்து கேட்டால் நான் என்ன சொல்வேன்" (யாத் 3:13) "என்னை நம்பார்கள்" (யாத்தி 4:1) "நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் " (யாத் 4:10) தேவன் அவரின் அனைத்து கேள்விகளுக்கும் பொறுமையாக பதிலளித்து தீர்வளித்த பின்னும் "நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" (யாத் 4:13) என்றார். தேவன் இவையெல்லாவற்றிற்கும் ஒரு மேலான பதிலாக கொடுத்தார், தேவனால் எல்லாம் கூடும்.

நாம் எதிர்மறையான சிந்தனைகளால் நம்முடைய விசுவாசத்தை இழந்து நமக்கு விரும்பியதை செய்வது நமக்கு சுலபமானது. ஆனால் "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று தேவன் தெளிவுப்படுத்துகிறார். நம்முடைய வாழ்விலும் மகத்துவமான அற்புதங்கள் நடக்குமா என்ற கேள்வி எழலாம். ஆனால் தேவனால் எல்லாம் கூடும்! நிச்சயமாக.

**24. தேவன் எனக்கு இப்படி செய்தருளினார் (லூக்கா 1:18-25)**

எலிசபெத் மலடியாயிருந்தோடு, (லூக்கா 1:36) மற்றும் சகரியா முதிர் வயதுள்ளவராயிருமிருந்தார். ஆனால் ஒரே இரவில் எல்லாவற்றையும் அப்படியே மாற்றுவது தேவனுக்கு உகந்ததாக இருக்கிறது.

ஆதியாகமத்தில் மலடியாயிருந்த தலைமுறையை நாம் பார்ப்பது வியப்பான ஒன்றாக இருக்கிறது. சாராள் (ஆதி 18:12) ரெபேக்காள் (25:12) மற்றும் ராகேல் (29:31) இந்த மூன்று தலைமுறைகளும் மிகப் பெரிய ஜாதிகளாக மற்றும் தேசங்களாக உருவெடுத்ததை நாம் பார்க்கிறோம்.

தேவன் தன்னுடைய உண்மையான பெலத்தையும் தன்னுடைய வல்லமையான திட்டத்தையும் இந்த உலகிற்கு காண்பிக்கும் பொருட்டு பெலவீனமானதை, தெரிந்து கொள்வார். சதாரணமான ஒரு சூழ்நிலையில் மிக ஆச்சரியமான ஒரு செயலை செய்வதில் தேவன் பிரியப்படுவதைக் குறித்து நான் வியந்து போகிறேன். தேவன் சாதாரணமான மனிதர்களை கொண்டு அசாதாரணமான காரியத்தை செய்ய ஆவலாக இருக்கிறார்.

தாவீது "ஆண்டவரே இது இன்னும் உம்முடைய பார்வைக்கு கொஞ்ச காரியமாயிருக்கிறது" (2 சாமு 7:19)என்று கூறினார். தேவனுக்கு சாதாரணமானதே நமக்கு மிக அற்புதமாக இருக்கிறது.

பின்பு மரியாள் எலிசபெத்தை பார்க்க சென்ற போது அவர்கள் இருவரும் தேவன் தங்களுக்கு செய்த மகத்தான அற்புதங்களை பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். (லூக்கா 1:51) அவர்கள் தேவனை குறித்து உற்சாகமடைந்தார்கள். அவர்களின் குழந்தை பிறப்பை பற்றியும் அல்லது தங்களின் ஆரோக்கிய உணவுகளை பற்றியும் அவர்கள் பேசவில்லை. ஆனால் அவர்கள் பெரிய காரியங்களாகிய இராஜ்ஜியத்தின் வீழ்வுகளையும் தேசத்தின் மீட்பையும், சிறையிருப்பின் விடுதலையையும் குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள். தேவனுடைய வல்லமையினால் செய்யக்கூடியவைகளுக்கு அவர்களுடைய சிந்தனையானது எழுப்பப்பட்டது. நம்முடைய சிந்தனையை தேவன் நம்மை கொண்டு செய்யும் அற்புதமான காரியங்களுக்காக தயார் செய்வோம்.

**25. உன்னை வெல் (லூக்கா 4:1-13)**

இயேசு ஞானஸ்நானம் பெற்று பெலன் அடைவதை தன் வாழ்க்கைக்கான ஒரு சிறந்த திட்டமாக வைத்திருந்தார். இருந்தும் தனக்கிருக்கும் உட்புற மற்றும் வெளிப்புற போராட்டங்களில் வெற்றி பெற்று ஆத்துமாக்களை காப்பாற்ற வேண்டுமென்று அறிந்திருந்தார். பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமென்பது அவருடைய குறிக்கோளாயிருந்தது. அவர் தன்னுடைய வாழ்க்கையை எந்த குற்றமும் அற்ற ஜீவபலியான தேவ ஆட்டுக்குட்டியாக ஒப்புக்கொடுத்தார். இந்த தொலைந்து போன உலகிற்கு இரட்சிப்பை கொண்டு வருவது அவருடைய கனவாயிருந்தது.

நாம் எத்தனை போரில் தோற்கிறோம் என்பதை விட எத்தனை போரில் வெற்றிபெறுகிறோம் என்பதில் தான் ஒரு போரினுடைய வெற்றி இருக்கிறது. இயேசு தனது அனைத்து மன போராட்டங்களிலும் வெற்றி பெற விரும்பினார்.

அதுதான் அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையை வாழ அவரைத் தூண்டியது. அது அவரை ஜெபிக்க வைத்து அவரை தாழ்மைப்படுத்தி உபவாசிக்க செய்து மற்றும் ஒவ்வொரு தூண்டுதல்களையும் எதிர்த்து போராட வைத்தது.

நம்முடைய மிகப்பெரிய பாவம் நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு செய்தது கிடையாது. இப்போது இருக்கும் கோபம், சோம்பேறித்தனம், அசுத்தமான பார்வை, மன்னிக்க முடியாத நிலை பெருமை மற்றும் நியாயமில்லாத புறங்ககூறுதல் போன்றவை தான் பெரியதாக இருக்கிறது. இதை உங்களால் பார்க்கமுடிகிறதா? இயேசுவும் அதையே பார்த்தார், அதற்காகவே வசனங்களை கொண்டு போராடினார்.

இது ஒரு பெரிய காரியமில்லை என்று "நாம் நினைக்கும் காரியத்தை எதிர்த்து போராடும் போது நமக்கு வெற்றி நிச்சயம்". இயேசு ஏற்கனவே உங்களுக்காக இந்த போரிலிருந்து வெற்றி பெற்றார். வெற்றியின் பாதையில் நீங்கள் ஒரு நட்சத்திரமாக இருக்கிறீர்கள். ஜீவ கிரீடம் உங்களின் தலை அளவிற்கு ஏற்றாற்போல் உருவாக்கப்பட்டிருக்கிறது. நம்மை நாமே வெல்வோம்.

**26. முதலில் பிடித்த மீன் (லூக்கா 5:1-11)**

இயேசு கெனேசரேத்து கடற்கரையில் பிரசங்கிக்கும் போது திரளான ஜனங்களும் பேதுருவும் அவருடைய நண்பர்களும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். கடந்த இரவில் மிகவும் கடினமாக உழைத்தும் ஒன்றும் அகப்படாமல் சோர்ந்துப்போய் இருந்தார்கள். ஆனால் இயேசு "வலையை ஆழத்திலே போடு" என்றதும் அதற்கு உடனே கீழ்ப்படிந்தார்கள். அவர்களுடைய சோர்வடைந்த தருவாயிலும் இயேசுவுக்கு கீழ்படிய முடிவெடுத்ததன் மூலம் அவர்கள் திரளான மீன்களை பிடித்தனர்.

இந்தக் காட்சியை கண்டதும் பேதுரு மாற்றம் கொண்டார். அவர் "நான் பாவியாயிருக்கிறேன், என்னை விட்டு போய்விடுங்கள்" என்று கூறினார். ஏனென்றால் அவரது கீழ்படிதல் விசுவாசத்தால் வந்ததல்ல. பிறகு அவர் அதன் முடிவை பார்க்கும் போது வெட்கமடைந்தார். "என்னால் எப்படி இவ்வளவு அவிசுவாசமாக இருக்க முடிந்தது". பேதுருவின் வாழ்வில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் இடம் பெறுகின்றன, ஒன்று மிகவும் சந்தோஷமும் மற்றொன்று மிகவும் வேதனையுமாக இருந்தது. பெண்ணின் பிரசவ வேதனை போன்று அது இருந்தது. ஒரு பெண் பிரசவத்தை மிக வேதனையோடு சந்திக்கிறாள் இருந்த போதிலும் அடுத்த சில தருணங்களில் அந்த வலியானது முற்றிலும் மாறி மிகவும் சந்தோஷத்தை அவளுடைய வாழ்வில் தருகிறது.

நம்முடைய வாழ்க்கையிலும் இது போன்ற அதிக வலி நிறைந்த பல நேரங்கள் வரும். ஆனால், அதற்கு அடுத்த சில நேரங்களில் மிகுந்த சந்தோஷம் அடைவோம் என்பதை நினைவில் கொள்வோம். நாம் வேதனையில் இருக்கும் போது தேவனுக்கு செவிக்கொடுப்பதோ, கீழ்படிவதோ கூடாத காரியம். ஆனால், நாம் உறுதியாயிருந்து மற்றும் கீழ்படியும் போது உடனே காண்பது தேவனுடைய மகிமையைத்தான். அவருடைய அற்புதங்களை காணுவோம்!.

**27. விதவையின் குமாரனை உயிர்த்தெழுப்புதல் (லூக்கா 7:11-17)**

இயேசு நாயீன் ஊருக்குள் நுழைந்ததும், விதவையின் ஒரே மகனின் சடலத்தை இறுதி சடங்குக்காக எடுத்து செல்வதை பார்க்கிறார். திரளான ஜனங்களும் அந்த பெண்ணுக்கு பின் சென்றார்கள். இயேசு இந்த விதவையின் கண்ணீரையும் அவரது தீவிர ஏக்கத்தையும் கண்டு மனதுருகினார். ஜனக் கூட்டத்தார் அநேக நேரங்களில் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள், இருந்தும் சில சமயங்களில் உதவி செய்ய முயற்சிப்பார்கள். லாசரு இறந்த பின்பு, மார்த்தாள் மரியாள் மற்றும் ஜனத்துடன் இயேசுவும் அழுதார். நம் தேவன் நாம் அழும் போது நம்முடன் அழக்கூடியவராக இருக்கிறார். இந்த கூட்டத்தாரின் அழுகை இயேசுவை அற்புதம் செய்யும்படி நகர்த்தியதை நாம் இங்கே பார்க்கிறோம்.

ஒருவருடைய வேதனையில் பலர் பங்குகொள்ளும்போது தேவன் உடனடியாக அதில் பங்கு கொள்கிறார். நம்முடைய வேதனையின் போது மற்றவர்கள் பங்கு கொள்ள அனுமதிக்கவும் நாமும் மற்றவர்களின் வேதனையின் பங்கு கொள்வதும் மிக சிறந்தது. நம்முடைய பாவங்களை பகிர்வது போல் நம்முடைய வலிகளையும், வேதனைகளையும் பிரச்சனைகளையும் நாம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒருவருக்கு வெறுமென எதற்காக ஜெபிக்கிறோம் என்று தெரியாமல் ஜெபிப்பதைவிட ஒருவரின் வலியை புரிந்து கொண்டு அவருக்காக சிறப்பாக ஜெபம் செய்வதே சிறந்தது. தேவன் நம்முடைய அக்கரையான ஜெபங்களை கேட்கிறார்.

விதவையின் மகனை உயிர்தெழச் செய்ததை கண்டு இந்தக் கூட்டத்தார் தேவனை துதித்தார்கள். மூடிய ஒவ்வொரு கதவும் தேவன் கிரியை செய்வதற்கான சூழ்நிலையாக இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவனுடைய மகிமை வெளிப்படுவதை காணலாம். நம்முடைய தடைகளை ஜெபத்துடனும், விசுவாசத்துடனும் மேற்கொள்வதையே நாம் வழக்கமாக கொள்வோம். தேவன் தன்னுடைய மகிமையை வெளிப்படுத்தும்போது நாமும் அவருக்கு மகிமை செலுத்துவதில் பங்கு பெறுவோம்.

**28. பாவியாகிய ஸ்திரீ (லூக்கா 7:36-50)**

இந்த அற்புதத்தை அற்புதங்களிலே சிறந்த அற்புதமாகக் கருதுகிறேன். ஏனென்றால் நாம் நோயிலிருந்தும், பெலவீனங்களிலிருந்தும், மரித்த பின்பும் கூட உயிர்த்தெழலாம், ஆனாலும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படவில்லையென்றால் நன்மை என்ன?

இந்த பெண்ணை ஏன் பாவியாகிய ஸ்திரீ என்று அழைக்கிறார்கள். அவ்வூரில் அநேகர் பாவம் செய்திருக்கிறார்கள். நாம் ஒருபோதும் பாவியான பேதுரு என்றும்,

பாவியாகிய மார்த்தாள் என்றும் கேள்விப்பட்டதில்லை. இந்த ஸ்திரீ தன் மனதில், தான் பாவியென்றும், தான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தவள் என்றும் நினைத்திருந்தாள். இது தற்போதைய உணர்வல்ல, ஆனால் தன் வாழ்க்கை என்றைக்கும் மாற வேண்டுமென்ற ஒரு உறுதியான முடிவு. இயேசு அந்த பெண்ணிடத்தில் ஒரு பரிசுத்தவானின் முகத்தையோ, விபச்சாரிகளின் முகத்தையோ, குற்றவுணர்வுள்ள முகத்தையோ காணாமல் பாவியான ஸ்திரீயின் முகத்தை உடையவளாய் கண்டார். ஒருவேளை இதனால் தான் அப்பெண்ணிற்கு இயேசு ஒரு வாய்ப்பை தந்திருக்கலாம்.

நான் ஒரு கதையை கூற விரும்புகிறேன். 22 ஆண்டுகளுக்கு முன்பு எர்ணாகுளம் கலை மண்டபத்தின் அருகேயுள்ள ஆற்றங்கரையில் புதிதாய் பிறந்த கைக்குழந்தை ஒன்று அனாதையாய் கிடந்ததைக்கண்டார்கள். என் குழந்தை பயிலும் அதே பள்ளியின் நிர்வாகக் குழு அந்த குழந்தையை எடுத்து வளர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தனர். 3 ஆண்டுகளுக்கு பின்னர் பெல்ஜியம் நாட்டைச் சோர்ந்த ஒரு தம்பதியினர் அக்குழந்தையை தத்தெடுக்க முன் வந்தனர். பின்பு, அக்குழந்தையை தங்கள் நாட்டிற்கு கொண்டு சென்றனர். அந்த குழந்தை வளர்ந்து ஒரு பிரபல பாடகியானாள்.

அநேக விருதுகளைக் கொடுத்து அந்நாட்டினர் அவரை கௌரவித்தார்கள். அப்பெண் வளர்ந்த பின்னர், ஒரு நாள் இந்தியாவிற்கு திரும்ப வந்தார். தன்னுடைய தாயை காண வேண்டும் என்று விரும்பினார். தன்னை தத்தெடுத்த பெற்றோருடன் வந்து, செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்தார். 114 பெண்கள் முன்வந்து தங்களை அவளுடைய தாயென்று கூறினார்கள். அவர்களுடன் பேசின பின்பு அவர் மிகவும் சோர்வடைந்தார். அங்கு வந்திருந்த 114 பெண்களில் ஒருவர் முகத்திலும் பாவத்தின் குற்றவுணர்வு தென்படவில்லை என்றும் என் தாயை எப்படி கண்டுபிடிப்பேன் என்றும் கூறினார். பின்னர் கண்ணீரோடு தான் தத்தெடுக்கப்பட்ட நாட்டிற்கு சென்றார்.

நாம் பாவத்தின் முகத்தோடு இயேசுவிடம் சென்றோமானால் நம்முடைய பாவங்கள் அநேகமாய் இருந்தும், அவைகள் மன்னிக்கப்பட்டு, ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்க்கான சந்தர்ப்பத்தை பெறுவோம். கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் அடைவோம். நம்முடைய ஆத்மீக வளர்ச்சிக்கு நம் பாவங்களே தடைக்கல்லாய் இருக்கிறது.

**29. கானா ஊரில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றுதல் (யோவான் 2:1-11)**

இந்த திருமணத்தில் இயேசுவை ஒரு விருந்தினராகவும் ஒருமகனாகவும் மற்றும் விருந்தளிப்பவராகவும் மூன்று பாத்திரங்களில் பார்க்கிறோம். இயேசு யோவான் ஸ்நானனை போல் மக்களைவிட்டு ஒதுங்கியிருக்க வில்லை, அதற்கு மாறாக மக்களுடன் கலந்து கொள்ள அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தினார். இயேசு சராசரியான வாழ்க்கையின் நிகழ்வுகளில நுழைந்து அந்த நிகழ்வுகளை ஒரு மறக்க முடியாததாக

மாற்றுகிறார். இந்த திருமணத்திற்கு அழைத்த இயேசுவை யார் என்று இந்த தம்பதியினர் அறியாதிருந்தும் அதிர்ஷ்டசாலிகளாக இருந்தார்கள். இன்று நாம் இயேசுவை நம் வாழ்வின் ஆண்டவராக அழைத்ததினிமித்தம் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம் அல்லவா?

இயேசு எவ்விதத்தில் இந்த சூழ்நிலையை மேற்கொள்வார் என்று யாரும் அறியாதிருந்தும் மரியாள் தன்மகனால் எந்தசூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும் என்று அவர் மேல் விசுவாசம் வைத்தார். இயேசு ஒரு பொறுப்புள்ள மகனாக இருந்தார். இயேசு நிகழ்த்திய இந்த முதல் அற்புதமானது அனைவராலும் பார்த்து கவனிக்கப்பட்ட ஒரு நிகழ்வாக இல்லை. இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடந்தது என்று அங்கு விருந்திற்கு வந்த யாரும் அறியாதிருந்தார்கள். இந்த அற்புதத்திற்கு சாட்சிகளாக அங்கே தண்ணீர் கொண்டு வர உதவிய பணியாளர்களும், அவருடைய தாயாரும் மற்றும் சில சீஷர்களுமே இருந்தனர்.

ஒரு திருமணத்திலிருந்து தன்னுடைய கிரியையை துவங்கிய இயேசுவை பார்ப்பது நம்மை சிந்திக்கவைக்கிறது அல்லவா? தேவன் இஸ்ரவேல் தனக்கு உண்மையாக இல்லாததால் அவர்களை கடிந்து கொண்டார். தேவன் மனஸ்தாபப்பட்ட இடத்தில் மறுபடியும் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை இயேசு இந்த திருமணத்தின் போது புதுப்பித்தார்.

தண்ணீரை இரத்தமாக மாற்றியது பார்வோனுக்கும் மற்றும் நியாயத்தீர்ப்பின் ஒரு எச்சரிக்கையாகவும் இருந்தது. தண்ணீரை திராட்சைரசமாக மாற்றியதன் மூலம் நம்முடைய இருதயத்திலிருந்து நித்திய மகிழ்ச்சியின் ஊற்றுக் கதவை இயேசு திறக்கிறார். இந்த காலை பொழுதை தேவனுடன் உறவாடி மகிழுங்கள் சகலமும் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

### 30. அதிகாரியின் குமாரனை குணமாக்குதல் (யோவான் 4:46-54)

இயேசு மறுபடியும் கானா ஊருக்கு வந்தார். அங்கே தாம் நிகழ்த்திய அற்புத்தினால், தான் விதைத்த விதைகளை காணும்படி ஒருவேளை அவர் அங்கே வந்திருக்கலாம். ஆம், விதையானது அங்கே முளைக்க தயாராக இருந்தது. ஒரு அதிகாரி தன்னுடைய மகன் மரணத்தருவாயிலிருந்ததினிமித்தம் இயேசுவை பல மைல் தூரம் பயணம் செய்து காண வந்தார். அந்த அதிகாரி ஒரு யூதனா அல்லது புறஜாதியா, அவர் எந்த நிலையிலிருந்தார், இயேசுவைப்பற்றி முன்பு அவருக்கு என்ன தெரியும், என்பது நமக்கு தெரியாது. ஆனால் அவர் இயேசுவிடம் தன்னுடன் வரும்படி கெஞ்சினார் என்று நமக்கு தெரியும். இயேசுவிடமிருந்து வந்த முதல் பதில் கடிந்து கொள்வதற்கு அடுத்ததாக இருந்தது. ஆனால் இந்த தகப்பனார் இயேசுவின் மேல் பலவீனமடையா ஒரு விசுவாசத்தை

வைத்திருந்தான். மரண தருவாயில் இருக்கும் தன் மகனிடம் வரும்படி இயேசுவை அழைக்கிறார். நீ போகாலம் என்று இயேசு சொன்னவுடன் மரணத்தருவாயிலிருக்கும் தன்னுடைய மகனிடம் சென்ற இந்த நபரின் ஆழமான விசுவாசத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

அந்த அதிகாரி தன் மனதில் என்ன நினைத்திருந்தார் என்று நமக்கு தெரியவில்லை. ஆனால், இவையெல்லாம் இயேசுவால் தான் என்று அவருடைய அடுத்த பதில் கூறுகிறது. அவருடைய வேலைக்காரன் வந்து அவர் மகன் சொஸ்தமானதை அறிவிக்கும் போது அது எந்த நேரம் என்று தெரிந்து கொள்ள ஆவலாயிருந்தார். ஏனென்றால் அவரது நோக்கம் இயேசுவின் மேலிருந்தது.

ஏழாம் மணி நேரமென்றால் அது மாலை 7 மணி அதாவது இந்த மனிதன் ஒரு இரவு முழுவதும் பிரயாணம் செய்து தன் வேலைக்காரரை சந்திக்க வந்தார். இந்த மனிதன் இயேசுவின் மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தன் மகனை மரணப்படுக்கையில் விட்டு விட்டு பல மைல்கள் தூரம் கடந்து சென்று இயேசுவை சந்தித்து, அவருடைய வார்த்தைகளின் மீது விசுவாசம் வைத்து, பயணம் செய்து நம்பிக்கையுடன் மறுபடியும் இரவு நேரத்தில் தன் வீட்டிற்கு காலதாமதமாக வர தயாராக இருந்தார்.

கானானிய ஸ்திரீயின் மகளை தூரத்தில் இருந்து குணமாக்கியது போல இந்த நூற்றுக்கு அதிபதியின் மகனையும் இயேசு குணமாக்கினார். தூரமாகவோ அருகாமையிலோ, பார்த்தோ, பார்க்காமலோ, யூதரோ அல்லது புறஜாதியாரோ, உயிரோடு இருப்பவரோ அல்லது மரித்தவரோ யாராக இருந்தாலும் இயேசுவே அனைவருக்கும் ஆண்டவராயிருக்கிறார்.

**31. பிறவி குருடன் (யோவான் 9:1-34)**

சிலர் தேவனுடைய பெரிதான அற்புதங்களை கண்டாலும் கூட அவரை விசுவாசிக்க மாட்டார்கள். இருப்பினும் சிலருக்கு தேவன் மேல் நம்பிக்கை வைப்பதற்கு ஒரு சிறிய நிகழ்வு போதும். பிறவி குருடன் பார்வையடைந்ததை இந்த நிகழ்ச்சியில் உள்ள அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆனால் எல்லோருமே ஒருமிக்க இயேசுவை விசுவாசிக்க மறுத்தார்கள். இதையெல்லாம் விட, தேவன் இவ்வளவு பெரிய மகத்தான அற்புதத்தை செய்திருந்தும் அந்த குருடனின் பெற்றோர் தேவனுக்கு மகிமை செலுத்த மறுத்தார்கள். பரிசேயர்கள் மீதான பயத்தின் நடுக்கத்தினால் அப்படி இருந்தார்கள்.

நீங்கள் எல்லோருக்கும் முன்பாக தேவனை மகிமைப்படுத்துவதில் கவனம் செலுத்துபவரா? நீங்கள் இயேசுவைப்பற்றி பேச கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்துபவரா? அல்லது இந்த பெற்றோரைப் போன்று, அவன் பேசட்டும் என்று சொல்பவரா?.

அந்த குருடன் தனக்கு பார்வை கிடைத்தவுடன் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பான்? நமக்கு அற்புதமான பார்வையை தந்த தேவனுக்கு நாம் எந்த அளவு மகிழ்ச்சியாகவும் மற்றும் நன்றியுள்ளவர்களாகவும் இருக்கிறோம்? நமக்கு கேட்கும் திறன், நல்ல அறிவுத் திறன் மற்றும் நடப்பதற்கும் பேசுவதற்குமான திறன் இருக்கிறது. இப்படிப்பட்ட அற்புதமான ஆசீர்வாதங்களுக்காக நாம் எந்த அளவு அவருக்கு சேவை செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்? கொடிய நோயிலிருந்து நாம் குணமடைந்தவுடன் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாகவும் எவ்வளவு சந்தோஷமாகவும் இருக்கிறோம். இன்று தேவன் நம்மை அநேக சம்பவங்களிலிருந்து மிக பத்திரமாக பாதுகாத்து, நமக்கு எந்தவித நிரந்தர காயங்களும் ஏற்படாதபடிக்கு அநேக நோயிலிருந்தும், விபத்துகளிலிருந்தும் காத்துக்கொள்கிறார். இப்படியிருக்க அவருடைய மகிமையை பிறரிடத்தில் பகிர்ந்துக் கொள்ள நாம் அதிக உற்சாகமாய் இருக்க வேண்டும்.

நமக்கு கண்பார்வை கொடுக்கப்பட்டும், தேவன் நமக்கு வைத்திருக்கும் பொறுப்புகளுக்கு நாம் நம்மை கண்பார்வையற்றவர்களாக காண்பிக்கக் கூடாது. தேவன் நம்மை பயன்படுத்தி நம்முடைய சமுதாயத்திலும், குடும்பத்திலும் மற்றும் சபையிலும் செய்யப் போகிறதை முன் குறித்த திட்டங்களை நாம் மறவாமல் இருக்க வேண்டும். எங்கும் எப்போதும் நாம் தேவனுடைய மகிமையைப் பிரசித்தப்படுத்துவோம்.

**32. லாசரு உயிர்த்தெழுதல் (யோவான் 11:1-44)**

இயேசு லாசருவின் குடும்பத்துடன் நெருங்கிய உறவுமுறையை கொண்டிருந்தார். லாசரு, இயேசுவின் நண்பன் என பிறரால் அறியப்பட்டவன். அவனுடைய குடும்பமும் நம்மைப் போலவே நாள்தோறும் அநேக பாடுகள் நிறைந்தது. இப்படிப்பட்ட கடினமான நேரங்களில் நாமும் குறை கூறிக் கொண்டும் முறுமுறுத்துக் கொண்டும், இருப்பதை காண்கிறோம். தேவன் ஏன் இதை எனக்கு செய்கிறார் என்று நினைப்போம். தேவன் வல்லமையுள்ளவர், அற்புதமாய் எனக்கு விடுதலை கொடுக்க முடிந்தும், அவர் ஏன் என்னிடத்தில் இல்லை? என்போம்.

யவீரு வியாதியாயிருக்கும் போது, இயேசு அவனை சந்திக்க செல்லவில்லை. அநேகர் இதைக் குறித்துப் பேசி குறை கூறியிருக்கலாம். லாசரு மரித்தபின் இன்னும் அதிகமாய் குறை கூறியிருப்பார்கள். லாசரு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு அவனுடைய சரீரம் அழிய தொடங்கியது ஆனாலும் அனைத்து நம்பிக்கையும் இழந்த குடும்பத்தை சந்திக்க இயேசு சென்றார்.

பிரச்சினை நேரங்களை சந்திக்க தேவன் ஏன் அனுமதிக்கிறார்? பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை கொசு கடிக்கக்கூட அனுமதிக்க மாட்டார்கள். அதே பெற்றோர்கள்,

தங்கள் பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடும் போது, அவா்களை உறுதியாய் பிடித்துக் கொள்வார்கள்.

பிள்ளைகள் எவ்வளவு கடினமாக போராடினாலும், பெற்றோர்கள் சகித்துக் கொள்வார்கள். ஏனென்றால் பிள்ளைகளுக்கு கொடிய நோய்களிலிருந்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டும் என்பது ஒவ்வொரு பொற்றோரின் முக்கிய கடமையாகும்.

நம்முடைய ஆத்துமாவை பாதுகாத்துக் கொள்ள எந்த அளவிற்கு வேதனைத்தர வேண்டும் என்று நம்முடைய பரலோகத்தின் பிதா நன்கு அறிந்திருக்கிறார். நாம் குற்றமற்றவர்களாகவும், குறையில்லாதவர்களாகவும் நம்மை தேவனுக்கு முன்பாக நிறுத்தும்படி இத்தனை பிரச்சனைகளை அனுமதிக்கிறார். இயேசுவின் மணவாட்டியாக நம்மை முன் நிறுத்த எவ்வளவுத் தயாராக இருக்கிறீர்கள்?

தேவனிடத்தில் முழுமையாக நம்மை சமா்ப்பிப்போம். சரியான நேரத்தில் தேவன் செயல்புரிவார். நாம் எவ்வளவு அழுகியிருந்தாலும் நாற்றம் வீசினாலும், இயேசு நமக்கு உதவி செய்ய வல்லவா்.

### 33. நொருங்கிய அவயங்களை உயிர்ப்பித்தல் (யோவான் 18:10-11, லூக்கா 22:49-51)

கிறிஸ்து பூமியில் வாழ்ந்த வாழ்க்கையின் கடைசி நிகழ்வுகளும் அவருடைய பாடுகளும், சிலுவை மரணமும் யோவான் 18 ஆம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். பாடுபட்டு மரிக்கவே இயேசு பிறந்தார். ஆனால் இவ்வதிகாரத்தில் கிறிஸ்துவை மரணத்தின்பிடியில் பாதிக்கப்பட்டவா் போல் சொல்லப்படாமல், தைரியமுடனும், நோக்கத்துடனும், விருப்பத்துடனும் சிலுவை சுமக்கச்செல்லும் கிறிஸ்துவாய் காண்கிறோம். மரணத்தின் முன்பும், பாடுகளுக்கு முன்பும் கிறிஸ்துவே தலையாயிருக்கிறார். அவா் அனைத்திலும் இன்னும் வல்லமையுள்ளவராயும், அவரின் உள்ளங்கரத்தினால் நம்மை தொட்டு நம் ஆழமான காயத்தை குணப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.

இயேசுவை கைது செய்வதற்கு மிகமுக்கியமான வேலைகாரனாக மல்குஸ் இருந்திருக்கலாம். ஆனால் பேதுருவோ, கிறிஸ்துவின் திட்டத்தை அறியாமல், இந்த சூழ்நிலையை தன் கையில் எடுத்து கொள்ள வேண்டுமென்று, மல்குஸின் தலையில் தாக்க முயன்று அவனை காதற வெட்டினான்.

சில சமயங்களில் நம்முடைய வாழ்க்கையும் தவறாக செல்லலாம். இவ்வுலகத்தார் காயப்படலாம், அவர்களின் ஆரோக்கியம் தோற்கலாம் (குறையலாம்) ஆனால், இன்று கிறிஸ்துவின் திட்டத்தை, பேதுருவைப்போல் நாமும் அறியாமல் இருக்கிறோமா? நம்முடைய கோபத்தின் பட்டயத்தால், பொறாமையின் பட்டயத்தால், பெருமையின் பட்டயத்தால், வெறுப்பின் பட்டயத்தால், கசப்புணர்ச்சியின் பட்டயத்தால்,

மன்னிக்கமுடியாது எனும் பட்டயத்தால் நாம் அடிக்கடி அநேகரை எப்படி வெட்டிக் கொண்டிருக்கிறோம். தேவனுடைய வாக்கை நாம் நினைத்தருளவேண்டும். தேவன் அனைத்திற்கும் தலையாய் இருக்கிறார் கிறிஸ்துவின் பாடுகளின் மூலம் தேவன் நமக்கு சிறந்த நோக்கங்களை வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவன் சிறந்த நோக்கத்தை வைத்திருக்கிறார்.

மல்குஸ் குணமாக்கப்பட்டான் அதற்கு கிறிஸ்துவின் உள்ளங்கை மட்டுமே தேவைப்பட்டது. கிறிஸ்துவால் தீர்க்க முடியாத பெரிய பிரச்சினைகள் நம்முடைய வாழ்வில் கிடையாது. அவருடைய உள்ளங்கையின் தொடல் மட்டும் போதும். ஆதலால், சகோதர சகோதரிகளே. "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று இயேசு கூறுகிறார்.

**34. வெறுமையான கல்லறை (மத்தேயு 28:1-6)**

ஆதியிலே தேவன் பூமியையும் மனிதனையும் ஆறுநாட்களில் சிருஷ்டித்து, ஏழாம் நாள் ஓய்வெடுத்தார். இவ்வசனத்தில், கிறிஸ்து தம்முடைய மீட்கும்பணியை முடித்து, கல்லறையில் ஓய்வெடுத்த பின் பஸ்கா பண்டிகை முடிந்த முதலாம் நாளில் உயிர்த்தெழுந்து, தம் கிரியைகளை பூரணமாக்கினார். கிறிஸ்துவே இவ்வுலக மாந்தரின் ஒரே நம்பிக்கையானவர், அவரே பிரகாசிக்கும் காலை நட்சத்திரமானவர் (வெளி 22:16). இயேசுவே வேராயும், தாவீதின் குமாரனும், அல்பாவும் ஒமேகாவும், முதலும் முடிவும், ஆதியும் அந்தமுமானவர். இயேசுவே உண்மையான ஒளி, இருளில் பிரகாசிக்கும் ஒளியும் இவரே. யோவான் 1:5 இல் இருளானது ஒளியை புரிந்து கொள்ளவில்லை என்று யோவான் கூறுகிறார்.

இருளானது ஒளியை எப்படி புரிந்துகொள்ள முடியும்? இவை இரண்டையும் ஒன்றாக காணமுடியாது. இயேசுவின் வெறுமையான கல்லறை நம்முடைய உந்துதலாக இருக்கவேண்டும். இது நம்முடைய பலத்தின் பிறப்பிடமாக வேண்டும். பலம்கொண்ட மரணமானது வெறுமையான கல்லறைக்கு முன்பு பலனற்றதாயிருக்கிறது.

ஒரு பள்ளி ஆசிரியை, தன் பள்ளி மாணவர்களிடம் புதிய தொடக்கத்தை குறிப்பிடக்கூடிய ஒரு பொருளை ஈஸ்டர் விடுமுறைக்குப் பின் எடுத்து வர வேண்டும் என்றார். பின்பு, மாணவர்கள், முட்டை, விதை, துளிர்விட்ட செடி போன்றவற்றை கொண்டு வந்தனர். ஆனால் ஒரு மாணவன் வெறுமையான பெட்டியை எடுத்து வந்தான், அதனைக் கண்ட முழு வகுப்பும் அவனைப்பார்த்து நகைத்தார்கள். கடைசியில், பள்ளி ஆசிரியை அதற்கான விளக்கத்தை கேட்டார். அந்த சிறுவன் தான் கேட்ட ஈஸ்டர் செய்தியை விளக்கமாக

கூறினது ஆசிரியையை வியக்க வைத்தது. வெறுமையான கல்லறையானது மனித குலத்தின் புதிய தொடக்கத்தை பிரதிபலிக்கிறது.

இன்று நீங்கள் உங்களின் வாழ்க்கையை ஒரு வெறுமையான பெட்டி என்று நினைத்தால், கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் நீங்கள் சரியான இடத்தில்தான் இருக்கிறீர்கள், ஏனென்றால் தேவன் வெறுமையில் இருந்துதான் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார்.

**35. நாம் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் (யோவான் 21:1-14)**

தேவன் நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்யும் வல்லமையுள்ளவர். இயேசுகிறிஸ்து அநேக அற்புதங்களை செய்ததும், தண்ணீரின் மீது நடந்ததும், காற்றை அமைதலாக்கினதும், ஐந்தாயிரம் பேருக்கு உணவளித்ததும் கலிலேயா கடற்கறையாகிய திபேரியா கடற்கரையில்தான். இராத்திரியில் மீன்களை பிடித்துவிட்டு, காலையில் அதனை விற்பனை செய்வது பொதுவாக வழக்கம். வாழ்நாள் முழுவதும் மீன்பிடிப்பை தொழிலாக கொண்ட இந்த மீனவர்கள், அன்று முழு இரவும் ஒரு மீனைக்கூட பிடிக்கவில்லை.

வசனம் 6-இல் அப்பொழுது அவர், "நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் " என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க முடியாமற் போனார்கள். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நம்முடைய பாத்திரங்களை தேவன் நிரப்புகிறார். ஆசீர்வாதம் பொழிகிறது. வாழ்வின் பரி பூரணமாகிறது. நாம் தேவனை நம்பி கீழ்படியும் போது இதனை செய்வார்.

**சங்கீதம் 128 ஆம் அதிகாரத்தை எண்ணிப்பாருங்கள்.**

*வ. 1. கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்.*
*வ. 2. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.*
*வ. 3. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்கொடியைப் போல் இருப்பாள், உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள்.*
*வ. 4. இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.*

**உபாகமம் 7 ஆம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேலருக்கு கூறினது.**

*வ. 13. உன் மேல் அன்புவைத்து உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் உன்னைப்*

*பெருக்கப்பண்ணி, உன் கர்ப்பக்கனியையும் உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும், உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டு மந்தைகளையும் ஆசீர்வதிப்பார்.*

*வ. 14. சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசிர்வதிக்கப்பட்டிருப்பாய்; உங்களுக்குள்ளும் உங்கள் மிருக ஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும் பெண்ணிலாகிலும் மலடிருப்பதில்லை.*

*வ. 15. கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்;*

என்கிற வசனங்களையும் எண்ணிப்பாருங்கள்.

**36. விசுவாசியாயிரு (யோவான் 20:24-28)**

"இணைப்பு" என்கிற வார்த்தை இன்றைய வாழ்வில் மிக முக்கியமாகும். கைப்பேசி, மின் அஞ்சல், SMS போன்றவை இல்லாத வாழ்க்கையை இன்று கற்பனை செய்யவே முடியாது. 24 மணி நேரமும் நம்மால் பிறருடன் இணைந்திருக்க முடிகிறது. இன்று மற்றவரோடு இணைந்திருப்பது மிக சுலபமாக இருப்பினும், உண்மையிலேயே மற்றவரிடம் மெய்யாகவும், ஆழமாகவும் இணைந்திருப்பது சந்தேகத்திற்குரியது.

முக்கியமான கூட்டங்களை தோமா ஏன் தவறவிட்டார்? நாம் அறியோம். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதை மட்டும் அவர் தவறவில்லை, சகோதர சகோதரிகளிடமும், வேத வசனத்திலும், இணைப்பில்லாமற்போனான். அவநம்பிக்கையும், அவிசுவாசமும் தோமாவின் இதயத்தின் கெபியானது. நன்மையான பொருட்கள் நம்மை திசைதிருப்பலாம். சமீபத்தில் ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் கண்டறிந்தது என்னவெனில், வகுப்பில் பாடம் நடத்தும் போது, மாணவர்கள் அதனை குறிப்பெடுக்கவேண்டும் என கருதி அனைத்து மாணவர்களுக்கும் அப்பல்கலைக்கழகம் (Laptop) கணினி கருவியை கொடுத்தது. ஆனால் வகுப்பில் மாணவர்கள் அக்கணிணியை பயன்படுத்தி சமூக இணையதளத்திலும், நண்பர்களுடன் பேசிக் கொண்டும் நேரத்தை வீணடிக்கின்றனர். ஆகையால் அக்கருவி மாணவர்களின் கற்றுக்கொள்ளும் திட்டத்தை திசைத்திருப்புகிறது.

நீங்கள் ஆத்மீகமாக வளருவதற்கு எந்த நல்ல காரியங்கள் உங்களை திசைத்திருப்புகிறது, சபைக் கூட்டத்தை தவறுவதாலோ, கிறிஸ்துவோடும், அவரின் சீஷர்களோடும் இணையாமல் இருப்பதினாலோ? சந்தேகிக்காமல் விசுவாசியுங்கள்.

**37. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் (அப்போஸ் 3:1-8)**

அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது, என்று 2:43-ஆம் வசனத்தில் லூக்கா எழுதியிருக்கிறார். அதற்கான உதாரணத்தைத்தான் இங்கு அவர் கொடுத்து இருக்கிறார். இயேசு கொலைசெய்யப்படும்போது, மகத்துவமான அற்புதங்களின் காலம் முடிவடைந்துவிடவில்லை. ஆனால், புதிய காலத்தின் தொடக்கம் தீப்பொறியாய் அமைந்தது. இவை அதிக அனலையும் வல்லமையையும் சேர்த்தது. வல்லமையான அற்புதம் நடக்க இயேசுவின் நாமம் மட்டுமே போதுமானது.

இவ்வசனத்தில் பேதுருவும் யோவானும் ஒன்றாக சென்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இன்று உயிரோடிருந்தால், தங்களின் சண்டைச் சச்சரவுகளை பகிர்ந்து நகைத்திருப்பார்கள். பேதுருவின் மனந்திரும்புதல் பிரதான ஆசாரியர்களின் வாசஸ்தலத்தில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்தது. நாமும் இருவராக ஜெபத்தில் ஒன்றாய் தரித்திருந்தால், மகத்துவமுள்ள அற்புதங்களை காணமுடியும்.

**38. ஐனேயா, தபீத்தாள் - எழுந்திரு (அப்போஸ் 9:32-41)**

ஐனேயா என்னும் பேருள்ள மனுஷன் எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்தான். பேதுரு, அவனைக் கண்டு நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்று சவால் கொடுத்தான். பின்பு, இயேசுவின் நாமத்தில் அற்புதம் நடந்தது. அதேபோல், நாமும் வேறு யாராவது கிறிஸ்துவைக் குறித்த சிந்தனையில் திமிர்வாதமாய் இருப்பதை கண்டால், அவர்களைக் கடிந்து கொண்டு அவர்களின் வாழ்க்கை கவனித்துக் கொள்ள சவால் கொடுக்க வேண்டும். அப்பொழுது, அநேக அற்புதங்களை உங்களால் காண முடியும்.

தபீத்தாள் ஒரு சிறந்த பெண் ஆவாள். அழகிய மான் போன்று தன் நற்கிரியைகளினால் ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் மகிழ்ச்சியை பகிர்ந்தளித்தவள். தபீத்தாளின் அன்பில் அணைக்கப்பட்டவர்கள் அநேகர் அழுதுகொண்டிருந்தார்கள். பேதுரு எந்த ஒரு சந்தேகமும் இன்றி, ஜெபித்து அவளை எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் எழுந்தாள்.

அப்போஸ்தலர்களின் காலம் முடிவடைந்தது, ஆனால், பரிசுத்த ஆவியானவரின் காலம் இன்றே. வேதவசனத்தின் வல்லமையும், ஜெபத்தின் வல்லமையும் நம்மில் இருக்கிறபடியால் இன்னும் அநேக அற்புதங்கள் காணயிருக்கிறோம்.

**39. சோர்வும், மரணமும் (அப்போஸ் 20:7-10)**

பவுலின் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்த ஐத்திகு என்கிற வாலிபன் தான் சோர்வடைந்தபடியால் காற்றுவாங்க வேண்டும் என ஜன்னலின் கதவை திறந்து உட்கார

முடிவுசெய்திருக்கலாம். அன்று அவனுக்கு சிறந்த நாளாக அமையவில்லை. ஆனால் பவுலுக்கு சிறந்த நாளாக இருந்தபடியால், வெகுநேரம் பிரசங்கம் செய்தபடியால், ஐத்திகு மிகுந்த தூக்கமடைந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்தான். பவுல் அங்கு இருந்தபடியினால், ஐத்திகு உயிர்பிழைக்க முடிந்தது. இல்லையெனில் நற்கருணை பாடலுக்கு பதில், வேறு பாடலை பாடியிருப்பார்கள். ஐத்திகு மரணப்பிடியிலிருந்து தப்பிப்பிழைத்தான். மரணமானது பயம் தரக்கூடியது அல்ல. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரணத்தை மேற்கொண்டு அழித்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மரணம் என்பது வெற்றியின் சின்னம். அவர் நம்மை மரணத்தினின்றும், நித்திய இழப்பிலிருந்தும் இரட்சித்திருக்கிறார்.

முன்பு, மரணமென்பது, விளக்கை அணைப்பதற்கு ஒப்பிடப்பட்டது. ஆனால் இன்றோ, ஒளியானது உண்டானதினால், மரணமென்கிற விளக்கு தன்னை மகிழ்ச்சியாய் அனைத்துக்கொள்வதற்கு ஒப்பாயிருக்கிறது. இதனைக் குறித்து முன்பைவிட அதிகமாய் ஆறுதலடைவோம்.

**40. நீங்கள் பிழைத்தாக (இது) வேண்டும் (அப்போஸ்தலர் 27: 27-44)**

கப்பல், கடற்கரையோரம் இருப்பதுதான் பாதுகாப்பு, ஆனால் அதற்கென உருவாக்கப்படவில்லை என்று எங்கோ படித்திருக்கிறேன். கப்பலானது கடலின் காற்றிலிருந்து காத்துக்கொள்ளும் வகையில் கட்டப்படுகிறது. இவ்வசனத்தில் காணப்படும் கப்பலும், அத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டதினால் அநேக பொருட்களை இழக்கவேண்டியதானது. ஆனாலும், கப்பலிலிருந்தவர்கள் கப்பலை கறை சேர்க்க முடிவு செய்தனர், இருப்பினும் கப்பலின் முன்பகுதி கடற்மண்ணில் சிக்கிக் கொண்டது, கடற்காற்றின் அலைகளால் கப்பலின் பின்பகுதி சேதமடைந்தது.

நம்முடைய விசுவாசத்தை வீழ்ச்சியடையச் செய்யும் பலனில்லா காரியத்தில் நம் சிந்தனையை செலுத்த வேண்டாம். அதில் நமக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை.

கப்பலில் உள்ளவர்கள் அனைவருடைய கவனத்தையும், விசுவாசத்தையும் பதினைந்து நாட்களாக பவுல் அழைத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் பவுலை சில நேரங்களில் மட்டுமே நம்பினார்கள். இந்த பாவ உலகத்தில் பிழைக்க வேண்டுமானால் நாமும் விசுவாசம் கொள்ள வேண்டும். சாத்தானின் பொல்லாத தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான விசுவாசம் நமக்கு தேவை என்று பவுல் கூறுகிறார்.

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் முன்பு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

விசுவாசம் என்பது முடிவில் காணப்படுபவை.  இயேசு, நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும், என்றார். (மாற்கு 11:24).